# கேரளப் பாடநூல்

# தமிழ்

வகுப்பு VI

பகுதி 1

**Kerala Reader - Tamil (AT)**
**Standard VI**
**Part - 1**

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2025

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
    பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
    திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
    உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
    தவ சுப ஆசிச மாகே
    காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
    பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
    ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# தமிழ்

# 6

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2025
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

உயிர் வாழ உணவு தேவை என்பது போல் உள்ளம் வாழ மொழி தேவை என்பார்கள். மனிதன் ஆறறிவு படைத்தவன். அந்த ஆறாவது அறிவு என்பது அவனிடம் இருக்கும் சிந்தனை ஆற்றலாகும். சிந்தனை என்பது மொழி எனும் ஊடகத்தின் வழியே நிகழ்கிறது. எனவே மனிதனுக்கு இன்றிமையாத ஒன்றாக விளங்குகிறது மொழி. கீழ் வகுப்புகளில் பாடல்கள் பாடியும் கதைகள் கேட்டும் மாணவர்கள் மொழியறிவைப் பெறுகின்றனர். மேல் வகுப்புகளை எட்டும்போது மொழியின் அடிப்படைக் கூறுகளை அறிவதோடு பிழையின்றிப் படிக்கவும் பேசவும் எழுதவும் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதுவே மொழிக்கல்வியின் அடிப்படை நோக்கமாகும். மேலும் மொழிக் கல்வியின் பயனாக மொழியை மட்டும் தெரிந்து கொள்ளாமல், தம்மைச் சுற்றியிருக்கும் இயற்கையையும், தாம் உட்பட்ட சமூகத்தையும் மாணவர்கள் அறியவும் ஈடுபடவும் வேண்டும். இவற்றின் அடிப்படையில் சில பாடப் பொருள்களைத் திட்டமிட்டு, அப்பாடப் பொருள்களுக்கு ஏற்பப் பாடப்பகுதிகளைத் தேர்வு செய்து இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

பாடப்பகுதிகளைப் பரிமாற்றம் செய்வதால் மட்டும் நோக்கங்கள் நிறைவேறி விடுவதில்லை. மாணவர்கள் எந்த அளவுக்கு மொழியறிவு பெற்றுள்ளனர் என்பதை அளப்பதற்கும், மொழிப் பயிற்சி அளிப்பதற்கும் தகுந்த செயல்பாடுகள் இணைக்கப்பட்டுள்ளன. பாடங்களைக் கசடறக் கற்றும் செயல்பாடுகளைச் செவ்வனே செய்தும் மொழியாற்றலை வளர்த்துக் கொள்ளுங்கள்.

வாழ்த்துகள்.

**முனைவர். ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - VI - AT (Part 1)

**Advisor**

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

**Chairperson**

**Dr. Shini, S.**
Associate Professor of Tamil, University College, Thiruvananthapuram.

**Experts**

**Dr. Sathiyamoorthy, B.**
Asst. Prof. & Head of Tamil, Madurai Kamaraj University.

**Dr. Jeyasankar, J.**
Asst. Prof. Govt. College, Munnar.

**Members**

**Aji Prakash, M.H.**, UPST, GHS, Koovakkad, Kollam.

**A.J. Fathima Begum**, UPST, Govt. Tamil VHSS Chalai, Thiruvananthapuram.

**Hari Prakash, R.**, PD Teacher, GUPS, Menonpara, Palakkad.

**Selvam, D.**, UPST, Govt. UPS, Vandiperiyar, Idukki

**Umananthini, R.**, UPST, Govt. TTI, Kollam.

**Wilsent, K.**, UPST, LMS Tamil HS, Parasala, Thiruvananthapuram.

**Aromal,** Artist, College of Fine Arts, Thiruvananthapuram.

**Albin Francis,** Artist, College of Fine Arts, Thiruvananthapuram.

Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
**Assistant Professor (Tamil), SCERT.**

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


பக்கம்

அலகு 1 வசந்த காலம் ....... 7-28

வேனிற்காலம் ....... 8 - 14

மாரிக்காலம் ....... 15 - 21

கூதிர்காலம் ....... 22 - 28

அலகு 2 ஒற்றுமையே வலிமை ....... 29 - 56

நற்குணங்கள் ....... 30 - 41

நடுவு நிலைமை ....... 42 - 49

கூட்டுறவு ....... 50 - 56

அலகு 3 அயராது உழை ....... 57 - 77

உருமாறிய உலகத்தான் ....... 58 - 65

முன்னேற்றும் கைகள் ....... 66 - 70

உழைப்பின் பெருமை ....... 71 - 76

அகரமுதலி ....... 77 - 78

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 1

# வசந்த காலம்



பண்டைத் தமிழ் மக்கள் மாறிமாறி வரும் பருவ காலங்களைக் காலத்தின் மாற்றங்களாக மட்டும் கருதாமல் வாழ்வியலுடனும் அவர்கள் வாழும் நிலத்துடனும் பிணைத்துப் பார்த்தார்கள். அதனால் தான் கோடையின் வெம்மைக்கும் கூதிரின் குளிர்ச்சிக்கும் காரின் வளமைக்கும் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டார்கள்.

# வேனிற்காலம்



## இன்றே உறுதி ஏற்கணும்...

உச்சி வெயில் அடிக்குது
உச்சந்தலை வெடிக்குது
வெயில் கால நோயெல்லாம்
வேதனையைத்தான் கொடுக்குது
காரில் வேகம் கூடுதே
கரியமில வாயுவைக் கக்குதே

காலை மாலை குளிக்கணும்
தண்ணீர் நிறையக் குடிக்கணும்
செயற்கை பானம் வேண்டாமே
இயற்கை பானம் போதுமே
உடல் நலத்தைக் காத்திட
பழங்கள் நிறையச் சாப்பிடணும்

நிழலைத் தேடி அலைகிறோம்
வேர்வையில் புழுங்குறோம்
சாலை ஓர மரங்களை
வெட்டிடாமல் காக்கணும்
வரும் தலைமுறை உணரணும்
மரங்கள் நிறைய வளர்க்கணும்

கரியமில வாயு – கார்பன் டை ஆக்சைடு

**பெரும் பொழுதுகள் – 6**

கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்

பசுமை உலகமா மாற்றணும்
பசி இல்லாம வாழணும்
புவியின் வெப்பம் குறைக்கணும்
புது உலகம் படைக்கணும்
இயற்கை வளத்தைக் காத்திட
இன்றே உறுதி ஏற்கணும்...

– எஸ். டி. பாலகிருஷ்ணன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாநிலச் செயலாளராகப் பணியாற்றுகிறார். இவருடைய குக்கூ.... குக்கூ.... என்ற நூல் குழந்தைகளுக்கான பல்சுவைப் பாடல்களைக் கொண்டதாகும்.

## செயல்பாடுகள்

**வாசித்து மகிழுங்கள்.**

- பாடலைக் குரல் ஏற்றத்தாழ்வுடன் பாடுங்கள்.
- பாடலில் முதல் எழுத்து, இரண்டாம் எழுத்து ஒரேபோல் வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- பாடலை வாசித்து அதன் மையக்கருத்தை எழுதுங்கள்.
- பாடலை வாசித்து உங்களுக்குப் பிடித்த வரிகளை எழுதி, அதற்கான காரணங்களையும் எழுதுங்கள்.
- பாடலில் கடைசி எழுத்து ஒரேபோல் வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- இப்பாடலில் உடல் நலம் காத்திட கவிஞர் கூறும் கருத்துகளைக் எழுதுங்கள்.
- அகர முதலியைப் பார்த்துப் பொருள் கண்டறிந்து எழுதுங்கள்.
    - கார்
    - கரியமில வாயு
    - புழுங்குறோம்
    - வேதனை

## கோடையும் இனிதே!

கோடை பிறக்கப் போகிறது. இந்த ஆண்டு வெயில் மிகவும் அதிகமாக இருக்கக் கூடும் என்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் இப்படித்தான் சொல்கிறார்கள்.

ஒவ்வோர் ஆண்டிலும் முந்தைய ஆண்டின் வெயிலை விட அதிகம் இருப்பதாகவே மக்கள் உணர்கிறார்கள்; சலித்துக் கொள்கிறார்கள். பன்னிரு மாதங்களில் அதிகம் வெறுக்கப்படுவது மே மாதம் மட்டுமே.

கோடையைப் பெரும்பான்மையானவர்களும் விரும்புவதில்லை. குறிப்பாக, வெயிலின் வெப்பத்தைக் கண்டு பதறுகிறார்கள். குளிர் சாதன அறையைவிட்டு வெளியே வரக்கூடாது என எச்சரிக்கை செய்கிறார்கள்.

காலம் காலமாக வெயிலில் நடந்து திரிந்து, வேலை செய்த இந்திய மக்களின் உடல்வாகை கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் அறிமுகமான குளிர்சாதன வசதி மாற்றிவிட்டது. இன்று வெயிலை வெறுக்கிறார்கள்; திட்டுகிறார்கள்.

அந்தக் காலத்தில் இருந்தது போல மரங்களும் நீர்நிலைகளும் இன்றில்லை. அதனால், வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கிறது என்பது உண்மையே. ஆனால், கோடை வெறுக்கப்படும் ஒன்றல்ல.

சிறுவயதில் கோடை எப்போது வரும் எனக் காத்திருப்பேன். காரணம், அதுதான் விடுமுறைக் காலம். இரண்டு மாத காலங்கள் விளையாடவும் ஊர்சுற்றவும் கூடிக் களிக்கவும் செய்யலாம். நாட்கள் போவதே தெரியாது.

கோடையில் ருசிப்பதற்கென்றே நுங்கு, வெள்ளரிக்காய், மோர், இளநீர், மாம்பழம் போன்றவை கிடைக்கும். வீதிக்கு வீதி தண்ணீர்ப் பந்தல் வைத்திருப்பார்கள். மண் பானையில் வெட்டி வேர் மணக்கும் தண்ணீரைக் குடித்தால் தொண்டையில் குளிர்ச்சிப் பரவும்.

உச்சிவெயிலில் அதன் வெப்பம் மறந்து சிறுவர்களாகிய நாங்கள் தெருவில் விளையாடிக் கொண்டிருப்போம். பெரியவர்களில் சிலர் நிழலில் போய் விளையாடுங்கள் என்று திட்டுவார்கள். வேம்பின் நிழல் தன் அகன்ற கைகளை நீட்டி வரவேற்கும்.



இன்று வீதியில் விளையாடும் சிறுவர்களைக் காண்பது அபூர்வம். கோடையிலும் 'சம்மர் கேம்ப்' வகுப்புகளுக்குப் போகிறார்கள். வீட்டுக்குள் வீடியோ கேம் ஆடுகிறார்கள் அல்லது கம்ப்யூட்டரில் நேரம் கழிக்கிறார்கள்.



கோடைக்கு எனத் தனியே ஒரு குணம் இருக்கிறது. கோடையின் பகலுக்கு என்று விசேஷமான தன்மையும் இருக்கிறது.

இன்றுள்ள கோடை காலி செய்யப்பட்ட வீட்டைப்போலவெறிச்சோடியிருக்கிறது. நினைவிலுள்ள கோடை என்பது சந்தோஷத்தின் ஊற்றாகயிருக்கிறது.

கோடைக்கால மழை உக்கிரமானது. அதன் வேகம், சீற்றம் கொண்டதாக இருக்கும். எப்படியும் சில நாட்கள் மழை பெய்துவிடும். ஆகவே, நீந்திக் குளிப்பதற்குக் கண்மாய்க்கோ, குளத்துக்கோ போகலாம்.

இன்று மழைக்காலத்தில் கூட மழையைக் காண முடியவில்லை. கோடையை விட்டுத் தப்பி எங்காவது வெளியேறிப் போய்விட வேண்டும் எனப் பலரும் நினைக்கிறார்கள். மலை வாழிடங்களே புகலிடம். ஆனால் கோடையில் ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களுக்குப் போனால் சந்திக்க வேண்டிய நெருக்கடிகள் மிக அதிகம். சந்தைக் கடை போலாகியிருக்கும்.

தார் பாலைவனத்துக்கு நான் போயிருக்கிறேன். வெயிலின் உச்சம் அது. ஆனால், அங்கே வசிப்பவர்களில் ஒருவர் கூட வெயிலைப் பற்றிப் புகார் சொல்வதில்லை. எரிச்சல் அடைவதில்லை. பாலைவனச் சூரியனை அன்றாடம் வழிபடுகிறார்கள். வெக்கையைத் தணித்துக் கொள்ள தயிர், மோர், நெய் அதிகம் சேர்த்துக் கொள்கிறார்கள்.

தகிக்கும் பாலையின் ஊடே ஆடுகள் மேய்த்துக் கொண்டிருக்கும் கிழவர்கள் நிலா வெளிச்சத்தில் நடந்து போவதைப் போல மெதுவாகப் போகிறார்கள். வெயிலுக்குப் பழகிய மனிதர்கள் அதன் மீது கோபம் கொள்வதில்லை.

இயற்கையை அழித்துவிட்டு, விவசாயத்தை ஒழித்துவிட்டு, நீர்நிலைகளை மூடி, வீடுகளைக் கட்டி, மாநகரங்களை உருவாக்கினால் கோடை நிச்சயம் கொடுமையாகத்தான் இருக்கும்.

நாம் இயற்கையை நேசித்தால், அது உயரிய பரிசை நமக்குத் தருகிறது. அதே நேரம் இயற்கையை வெறுப்பவர்களுக்கு, அது நோயை உருவாக்கிவிடுகிறது.

மழைக்காலம் மட்டுமில்லை; கோடைக்காலமும் இயற்கையின் பரிசே. அதை உணர்ந்து கொண்டு கோடையை எதிர்கொள்ளவும் அதற்கேற்ற உணவை உட்கொள்ளவும் உடைகளை அணிந்து கொள்ளவும் கூடிக் களிக்கவும் நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

தார் பாலைவனம் அமைந்துள்ள மாநிலம் – இராஜஸ்தான்

சிறுவர்கள் கூடி கதைகள் பேசவும் விரும்பியதைப் படிக்கவும் சேர்ந்து விளையாடவும் தாத்தா, பாட்டி வீடுகளுக்குப் போய் அவர்கள் அன்பை முழுமையாக உணரவும் கோடையே வழிகாட்டுகிறது. பெரியவர்களாகிய நாம் அதற்குத் தடையாக இருந்துவிடக் கூடாது என்பதே முக்கியம்.

– எஸ்.ராமகிருஷ்ணன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் 1966 ஏப்ரல் 13–இல் விருதுநகரில் பிறந்தார். பெற்றோர் சண்முகம், மங்கையர்க்கரசி. 'சஞ்சாரம்' என்ற நாவலுக்கு 2018–ஆம் ஆண்டில் சாகித்ய அகாதமி விருது பெற்றார். எண்ணற்ற புத்தகங்களை எழுதியுள்ளார். இன்றளவும் தமிழ்த் தொண்டு புரிந்து வருகிறார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை காணுங்கள்.
  - கோடையில் ருசிக்கும் பொருட்கள் எவை?
  - கோடைக்காலம் எந்தெந்த மாதங்கள் என எழுதுங்கள்.
- உங்களின் கோடைக்கால அனுபவத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- கோடை வெயில் கொடுமையாவதற்கான காரணங்களைக் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.

## பாதித் தண்ணீர் எங்கே?

இரண்டு வருடங்களாக மழை இல்லை. கோடைக்காலத்திற்குப் பிறகு வரும் மழைக்காலத்தில் வானத்தில் கருமேகங்களே வரவில்லை. பிறகு எப்படி மழை பெய்யும்?

கோடைக்காலத்தில் வெப்பம் அப்படியே தொடர்ந்தது. அதனால் நாக்கு வறண்டது. உதடுகள் காய்ந்தன. தாகம் அதிகம் எடுத்தது. பாப்பா அடிக்கடி தண்ணீர் குடித்தாள். அம்மா அதிகம் தண்ணீர் குடிக்காதே என்றாள்.

பிள்ளைகளை வயிறு முட்டத் தண்ணீர் குடி என்று சொல்லித்தான் வளர்ப்பார்கள். அம்மா 'தண்ணீர் குடிக்காதே' என்கிறாள். அவ்வளவு தண்ணீர்ப் பஞ்சம். வீட்டில் தண்ணீர் இல்லை.

குட்டித் தம்பி மட்டும் தண்ணீர் குடிக்காமலே எப்படி அடிக்கடி ஒண்ணுக்குப் போகிறான் என்பது தெரியவில்லை. அம்மாவிடம் பால் குடிக்கிறான். அதனாலேயோ? அவளுடைய பாவாடை சட்டைதான் நனைந்து விடுகிறது. அவளிடம் இரண்டு பாவாடை, சட்டைகள்தான் இருக்கின்றன. மாற்றாமல் அழுக்காகத் திரிய வேண்டியிருக்கிறது.

குட்டித் தம்பி பிறந்த சமயத்தில் அப்பா ஒரு விபத்தில் இறந்து போனார். அதிலிருந்து வீட்டில் வறுமை. அதனால் அம்மா இட்லி செய்து விற்கிறாள்.

காலையில் அம்மாவுக்கு வேலை அதிகமாக இருக்கும். பாப்பாவும் அம்மாவோடு சேர்ந்து வேலை செய்ய வேண்டியிருக்கிறது. முக்கியமாகக் குட்டித் தம்பியைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவன் எப்போதும் அழுதுகொண்டுதான் இருப்பான். எப்போதும் தூக்கி வைத்துக்கொள்ள வேண்டும். கீழே இறக்கினால் கத்துவான்.

பாப்பா பள்ளிக்கூடத்தில் நான்காம் வகுப்புப் படிக்கிறாள். 'பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காக வரவில்லையென்றால் பெயிலாக்கி விடுவேன்' என்றார் ஆசிரியர். யாரையும் பெயிலாக்க மாட்டாங்க என்பது அவளுக்குத் தெரியும். அவள் ஐந்தாம் வகுப்புக்குப் போய்விடுவாள். அதற்குப் பிறகு எப்படியோ?

பாப்பாவுக்கு இன்னொரு வேலை வந்துவிட்டது. மழை இல்லாததால் ஊர்க் கிணற்றில் தண்ணீர் இல்லை. கிணற்றில் தண்ணீர் இருந்தபோது அம்மாவே எடுத்து விடுவாள். ஊருக்கு வெளியே தூரத்தில் 'அடிபம்பு' இருக்கிறது. அதிலிருந்து தண்ணீர் எடுத்துவர வேண்டும். தினமும் தண்ணீர் கொண்டு வருகிற வேலை இப்போது பாப்பாவுக்குத்தான்.

அம்மா காலையில் இட்லி அவித்து விற்க வேண்டியிருக்கிறது. அதனால் தண்ணீர்த் தேவை இருந்தது. வீட்டில் இரண்டு பிளாஸ்டிக் குடங்கள்தான் இருந்தன. 'பிளாஸ்டிக்' குடத்தில் தண்ணீர் வைப்பது நல்லதில்லை என்று சொல்லுகிறார்கள். மண் பானைகள் இல்லை. உடைந்துவிடுகின்றன. புதிதாக வாங்கக் காசில்லை.

பாப்பா பிளாஸ்டிக் குடத்தை எடுத்துக்கொண்டு தண்ணீர் கொண்டு வரக் கிளம்பினாள். அம்மா, குட்டித் தம்பியையும் கொண்டுபோகச் சொன்னாள். அவன் அழுது கொண்டே இருந்தான். பாப்பா, தம்பியை இடுப்பில் சுமந்துகொண்டு குடத்தைக் கையில் எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.



குடம் நிரம்ப 'அடிபம்பில்' தண்ணீர் அடித்தாள். குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு தம்பியை இடுப்பில் சுமந்து கொண்டு நடந்தாள். அவளால் நடக்க முடியவில்லை. தண்ணீர்ச் சுமை அதிகமாக இருந்தது. சுமையைக் குறைக்க, பாதித் தண்ணீரைக் கொட்டினாள். இப்போது தம்பியையும் தூக்கிக்கொண்டு நடக்க எளிதாக இருந்தது.

பாப்பா குடத்தை இறக்கி வைத்தாள். குறை குடம் என்பதால் தண்ணீர்க் கூத்தாடியது. அவள் கொண்டுவந்த தண்ணீரை எடுத்துத்தான் இட்லி சாப்பிட்டவர்கள் கை கழுவுவார்கள். இப்போதுதான் வியாபாரம் தொடங்கியிருந்தது.

அம்மா குடத்தைப் பார்த்தாள். பாதித் தண்ணீர்தான் இருந்தது."பாதித் தண்ணீர் எங்கேயடி?" என்று அம்மா கோபமாகக் கேட்டாள்.

"கொட்டிட்டேன். தம்பியையும் தூக்கிக்கிட்டுச் சுமக்க முடியல" என்று பாப்பா பயந்துகொண்டே சொன்னாள். "கொட்டினியா...? தண்ணீரின் அருமை தெரியுமா உனக்கு...?

– சுகுமாரன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் முப்பது ஆண்டுகள் தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணி புரிந்தவர். ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். சிறார் இலக்கிய மாமணி, பாரதியார் புகழ் பரப்புநர், பாவேந்தர் நினைவு நல்லாசிரியர் விருது, பபாசியின் அழ. வள்ளியப்பா விருது, தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- தண்ணீரின் பயன்கள் எவை என எழுதுங்கள்?
- நமக்கு எங்கிருந்தெல்லாம் தண்ணீர்க் கிடைக்கிறது?
- கோடைக்காலத்தில் ஏற்படும் தண்ணீர்ப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண நீங்கள் கூறும் கருத்துகளைக் குறிப்பாக எழுதுங்கள்.
- கோடைக்காலத்தில் வெயிலின் தாக்கத்திலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள என்னென்ன முன்னேற்பாடுகளைச் செய்யலாம் என்பதை எழுதுங்கள்.
- கோடைக்காலத்தில் ஏற்படும் தண்ணீர்ப் பற்றாக்குறையை நிவர்த்திச் செய்ய ஒரு பொது குடிநீர்க்குழாய் அமைத்துத் தருமாறு பஞ்சாயத்துத் தலைவருக்கு ஒரு கோரிக்கை மனு எழுதுங்கள்.
- உங்கள் பகுதியில் நடைபெறும் 'கோடைமுகாம்' தொடர்பான சுவரொட்டி தயாரியுங்கள்.

# மாரிக்காலம்



தென்னிந்தியாவின் சிரபுஞ்சி – அகும்பே

## அடை மழையே!

அடைமழையே! அழுமழையே !!
　　ஆறுகுளம் தாங்கலையே
உடைப்பெடுத்து ஓடுவதால்
　　ஊருசனம் தூங்கலையே!

மழைகேட்டு மன்றாடி
　　மாரியிடம் கோரி நின்றோம்.
பழிதீர்க்க வந்தது போல்
　　பகலிரவாய்க் கொட்டுகின்றாய்.

"பா" எழுதி வான்மழைக்குப்
　　பலநாளாய்த் தவமிருந்தோம்.
நீர் இன்றி உயிரினங்கள்
　　நிலைக்காது நாமறிவோம்.

ஆறுகளில் நீரோட
　　அதைநோக்கி செல்வோமே.
ஆறுகளே நமைத் தேடி
　　அகத்துக்குள் வரலாமா?

ஏரிகுளம் தண்ணீரால்
　　எங்கெங்கும் நிறையட்டும்;

**மழையின் வேறு பெயர்கள்**

மாரி, தூறல், சாரல், ஆலி, சோனை, பெயல், புயல், அடைமழை, கனமழை, ஆலங்கட்டி, ஆழிமழை, துளிமழை, வருள்மழை

ஊருக்குள் தெருவுக்குள்
உபத்திரவம் தரலாமா?

நீரிருக்கும் ஏரிக்குள்
நம்மவர்கள் குடியிருந்தால்
வேறெங்கே நீர் போகும்
வீட்டுக்குள் வெள்ளம் வரும்.

பயிர்ப்பச்சை மூழ்கிவிடும்
பாதைகளும் பாலமிழக்கும்
இயற்கைக்கு ஊறு செய்தால்
இன்னல்களே நமக்கு வரும்.

வெள்ளத்தின் வேதனையும்
வெடிப்படைந்த விளை நிலமும்
இல்லையென ஆகட்டும்
இணைத்திடுவோம் நதியனைத்தும்.

– டாக்டர் எஸ்.எஸ். தமிழரசன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் எழுத்தாளராகவும் தமிழறிஞராகவும் பேராசிரியராகவும் விளங்குபவர். இவர் பல்வேறு கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவருடைய படைப்புகள் புதிய தலைமுறையினருக்கு ஊக்கம் அளிப்பனவாகத் திகழ்கின்றன.

## செயல்பாடுகள்

- அடை மழையே பாடலைக் குரல் ஏற்றத்தாழ்வுடன் பாடுங்கள்
- பிரித்து எழுதுங்கள்.
  - உடைப்பெடுத்து
  - பகலிரவாய்
  - பழிதீர்க்க
  - நாமறிவோம்
  - இல்லையென
  - நீரிருக்கும்
- மழையின் வேறு பெயர்களை எழுதுங்கள்.
- பாடலை வாசித்து அதன் கருத்தைக் கூறுங்கள்.
- இப்பாடலில் உங்களுக்குப் பிடித்த வரிகளைக் கூறி அதற்கான காரணங்களையும் எழுதுங்கள்.
- இதுபோன்ற மழைப் பாடல்களைத் திரட்டித் தொகுப்பு உருவாக்குங்கள்.

## வயநாடு வனவிலங்கு சரணாலயத்திற்கு ஒரு நடைப்பயணம்

உலக வனஉயிரின சேமநல நிதியம் (WWF) ஓர் உலகளாவிய அமைப்பு. அதன் கிளை அலுவலகம் திருவனந்தபுரத்தில் உள்ளது. இவ்வமைப்பு



மலையேறுதல், இயற்கை நடைப்பயணங்கள் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. ஆகஸ்ட் 8 முதல் 10–ஆம் தேதி வரை வயநாடு பகுதியில் உள்ள திருநெல்லி மலைப்பிரதேசத்தில் ஒரு மழைக்கால இயற்கை முகாமை நடத்தினார்கள். தமிழ்நாடு மற்றும் கேரளத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து இருபத்து எட்டு பேர் இந்த மழைக்கால இயற்கை முகாமில் கலந்து கொண்டார்கள்.

தமிழில் பயண இலக்கிய முன்னோடி ஏ.கே.செட்டியார்

திருவனந்தபுரத்திலிருந்து இரவு மங்கலாபுரம் எக்ஸ்பிரஸ்சில் பயணத்தைத் தொடங்கினோம். விடியற்காலை கோழிக்கோடு சென்றடைந்தோம். அங்குக் குளித்து, ரெடியாகி, காலை உணவையும் முடித்துக் கொண்டு எங்களுக்கென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தனிப்பேருந்தில் பயணித்தோம். எங்களை வழிநடத்திச் சென்றவர் டபிள்யூ. டபிள்யூ. எப்.–இன் (உலக வன உயிரின சேம நல நிதியம்) கல்வி அதிகாரி ஆவார். போகும் வழியில் ஒரு ரம்மியமான இயற்கைச் சூழலில் சுய அறிமுகம் செய்து கொண்டோம். பறவைகள் மற்றும் விலங்குகள் எழுப்புகின்ற ஓசையுடன் எங்கள் அறிமுகம் அமைந்தது.

அங்கிருந்து நேராகத் துஷாரகிரி அருவியை அடைந்தோம். அருவிக்குச் செங்குத்தான பாதையில் சிறிது நடந்து செல்ல வேண்டும்.முதலில் சிரமமாக இருந்தாலும் பிறகு எளிதாக ஏறிச் செல்ல முடிந்தது. போகும் வழியில் மலைப்பாம்பு ஒன்றைப் பார்த்தோம். அந்தப் பிரதேசத்து மக்கள் அது ஓடி விடாமல் இருக்க கயிற்றினால் கட்டி வைத்திருந்தார்கள். அந்தச் செய்தி உடனடியாக வனத்துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.



துஷாரகிரி அருவிக்குப் பல பெயர்கள். ஈராட்டுமுக்கு அருவி, மழவில் சாட்டம்,

வயநாட்டின் தலைநகரம் – கல்பற்றா

தும்பி துள்ளும் பாற எனப் பல்வேறு பெயர்களில் இதை அழைக்கிறார்கள். அங்கிருந்து கல்பற்றா வழியாக மானந்தவாடியை அடைந்தோம். அங்கு மதிய உணவு அருந்தி விட்டு வயநாடு மலைப்பகுதியிலிருந்து எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம்.தெற்கு வயநாடு மழை குறைவாகவும் வடக்கு வயநாடு செழிப்பாகவும் உள்ளது. மூன்று மணி நேரப் பயணத்திற்குப் பின் திருநெல்லியை அடைந்தோம்.

காளிந்தி ஆறு காளிந்தி மலையிலிருந்து புறப்பட்டு வருகிறது.திருநெல்லி மூன்று புறமும் மலைகளால் சூழப்பட்டுள்ளது.கேரள அரசின் வனத்துறை ஓய்வு இல்லத்தில் நாங்கள் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காளிந்தி ஆற்றைக் கண்டுகளிக்க அங்கிருந்து புறப்பட்டோம். இயற்கை எழில் கொஞ்சும் காடுகளைக் கடந்து காளிந்தியைக் கண்டு களித்தோம். மழை பெய்தாலும் காளிந்தியில் கண்ணாடி போன்று தண்ணீர் ஓடுகிறது. மாலையில் கேரளத்தின் உயிரினப் பல்வகைமை குறித்துப் படக்காட்சியும் திருநெல்லியைக் குறித்த சிலைடு காட்சியும் நடைபெற்றன. இரவு உணவுக்குப் பின் ஓய்வெடுக்கச் சென்றோம்.

காலை ஆறு மணிக்கெல்லாம் குளித்து ரெடியாகி, பழைமையான பாரம்பரியம் மிக்க அம்பலமான திருநெல்லி கோவிலுக்குச் சென்றோம். இந்த மஹாவிஷ்ணு கோவில் தெக்கன் காசி என்றும் அழைக்கப்படுகிறது. சுமார் எழுநூறு வருட பழக்கமான அந்தக் கோவிலுக்குப் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வந்து போகிறார்கள்.



கேரளத்தின் ஊட்டி வயநாடு

காலை உணவுக்குப்பின் மதிய உணவு, பழங்கள், பிஸ்கட் போன்ற தின்பண்டங்கள் அனைவருக்கும் தரப்பட்டன. நல்ல மழை. மழையில் நனைந்தவாறே எங்கள் நடைப்பயணத்தைத் துவங்கினோம். வழி நெடுகிலும் அட்டைகள். பட்சிப்பாதாளம் என்ற இடத்திற்கு நடைப்பயணம். அது அங்கிருந்து ஏழு கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. போகின்ற வழியில் மிளா, காட்டு எருமை, கருங்குரங்கு,மலை அணில் மற்றும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பறவை இனங்களைக் கண்டு ரசித்தோம்.

மழை விடாது பெய்து கொண்டிருந்தது. போகின்ற வழியில் புல்மேடுகள், சோலைகள், பசுஞ்சோலைகள், இலையுதிர்க் காடுகள், பசுமைமாறாக் காடுகள், புதர்ச்செடிகள்,பெரிய மரங்கள் என்று பல்வேறு வகையான காட்டுச் சூழலை அனுபவித்தோம். பதினைந்துக்கும் அதிகமான நீரோடைகளையும் கடந்து சென்றோம். குடகுமலையின் ஒரு பகுதி கேரளத்தின் ஒரு பாகம். கர்நாடக ஏரி என மூன்று மாநிலங்களில் எங்கள் பயணம் தொடர்ந்தது. கர்நாடக எல்லையில் குடகுமலை உள்ளது. மூங்கில் மரங்கள், தேக்கு மரங்கள் எனப் பல்வேறு வகையான மரங்களையும் கண்டு களித்தோம். வெயில் காலத்தில் உருகி, தண்ணீர் தரும் புல்வெளிகளும் இந்தப் பகுதியில் ஏராளம் உள்ளன. வடக்கு வயநாடு 1600 மீட்டர் உயரத்தில் உள்ளது. தெற்கு வயநாட்டில் செம்பிராக்கு மலை, முதுமலைக் காடுகள் உள்ளன.

வயநாடு மாவட்டம் உருவான ஆண்டு 1980

பட்சிப்பாதாளம் பாணாசுரர் மலையில் அமைந்துள்ளது. முன்னொரு காலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் போன்ற இயற்கை சீற்றத்தினால் அந்த மலையிலிருந்து பாறைகள் உருண்டோடி குகை போன்ற பகுதிகளாகவும் பறவைகளின் வீடுகளாகவும் கூடு கட்ட உகந்த இடங்களாகவும் உள்ளன. வௌவால், கழுகு, கண்ணாந்தளி, மலை முழக்கி வேழாம்பல் ஆகியவை இங்கு அதிகம் உள்ளன.



மாலை திருநெல்லி வந்தடைந்தோம். அட்டைகள் கடித்த இடங்களிலிருந்து அனைவருக்கும் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. சி.டீ. காட்சிகள் இரவு நடத்தப்பட்டன. மறுநாள் காலை வயநாடு வன உயிரின சரணாலயமான தோல்பெட்டிக்குச் சென்றோம். இது திருநெல்லியிலிருந்து எட்டு கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. காட்டு எருமை, குரங்கு, மான், மிளா, யானை போன்ற விலங்குகளையும் அவை நடந்து சென்ற சுவடுகளையும் போகும் வழியில் கண்டு ரசித்தோம். திரும்ப வந்து மதிய உணவுடன் முகாம் முடிவடைந்தது.

இந்தியாவின் நறுமணத் தோட்டம் வயநாடு

இறைவனின் சொந்த பூமி என்று அழைக்கப்படும் கேரளத்தின் வயநாடு பகுதியில் இயற்கை அன்னையின் அருட்கொடைகள் பரவிக் கிடக்கின்றன.

–ஜே. ஜோபிரகாஷ்

**ஆசிரியர் குறிப்பு** இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1957–இல் பிறந்தார். தேசிய பசுமைப்படையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக இருந்து லட்சத்திற்கும் அதிகமான மரங்களை நட்டுள்ளார். தமிழக அரசின் சுற்றுச்சூழல் சுடரொளி விருது உட்பட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளியுங்கள்.
  - உலக வனஉயிரின சேமநல நிதியத்தின் கிளை எங்கு அமைந்துள்ளது?
  - துஷாரகிரி அருவியின் வேறுபெயர்கள் எவை?
  - காளிந்தி மலையிலிருந்து உற்பத்தியாகும் ஆறு எது?
  - பட்சிப்பாதாளம் எந்த மலையில் அமைந்துள்ளது?
- வயநாடு வனஉயிரின சரணாலயம் குறித்துக் குறிப்பு எழுதுங்கள்.
- கேரளத்திலுள்ள வனவிலங்கு சரணாலயங்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- நீங்கள் சென்ற ஏதாவது பயண அனுபவத்தைக் கட்டுரையாக எழுதுங்கள்.

## இடவப் பாதி

தென்மேற்குப் பருவமழை மலையாளக் கொல்ல வருடம் இடவ மாதம் பாதியில் வரும். ஜூன் முதல் வாரத்தில் அதை இடவப்பாதி என்பார்கள். வாழை நடவுக்குரிய மழை; நாற்றங்கால் கட்டுவதற்கான மழை. ஜூன் மாதம் பள்ளி திறக்கும் போது நனைந்து சொட்டி, வழியெங்கும் பெருகியோடும் ஓடைகளில் இறங்கி ஆடிச் செல்வோம். பள்ளிக்கு உள்ளேயும் மழை பெய்து கொண்டிருக்கும். சிலேட்டையோ சாப்பாட்டுத் தட்டையோ தலைக்கு வைத்தபடி பாடம் கற்போம்.

இவ்வருடம் எட்டு நாள் தாமதம். நேற்று முன்தினம் கேரளத்தில் மழை கரை கடந்துவிட்டது என்றார்கள். நேற்று இப்பருவத்தில் எர்ணாகுளம் மரைன் டிரைவில் கடலை நோக்கி எழுந்த பன்னிரு மாடிக் கட்டடத்தின் எட்டாவது அடுக்கில் இருந்த தங்கும் விடுதியில் முழுச் சுவரையும் நிரப்பிய பெரிய கண்ணாடிச் சன்னலுக்கு அப்பால் வளைந்த கடலுக்குள் இருந்து இடவப் பாதி மழை திரண்டு பெருகி வருவதை எதிர் நின்று கண்டேன்.



கரிய மேகம் போல மழை வந்தது. அசைவற்ற கடல் மேல் ஒரு நிறமாறுதல் நெருங்கி வந்தது. பின் ஒரு கணத்தில் மாபெரும் விசிறியால் ஓங்கி அறைந்தது போல கண்ணாடிச் சாளரத்தை மோதியது. கண்ணாடி விளிம்பிலிருந்த கைவிரல் நுழையும் இடைவெளி வழியாக வந்த காற்று ஒரு கண்ணுக்குத் தெரியாத குளிர்ந்த

பட்டைப் போல அறைக்குள் நின்றது. அதைத் தொட முடிந்தது. அதை எதிர்த்த போது தள்ளி மறு சுவரை நோக்கிச் செலுத்தியது. அறையெங்கும் நீர்த்துளிகள் தெறித்துச் சுவர்கள் வழியத் தொடங்கின.

நேற்று இங்கே பருவ மழையின் முதல் இருள் வந்து பரவியது. நாலைந்து நாட்களாகவே காற்றில் வெக்கை இருந்தது. வெயில் மங்கி வியர்வைக் கடித்தது. காலை ஒன்பது மணிக்கும் விலகாத இருளில் ஒரு நடை சென்ற போது கணியாகுளம் ஏரிக்கு மேலே காற்றுப் பெருகிச் சென்று கொண்டிருப்பதை அறிந்தேன். சிந்தனைகளைக் கூட அடித்துப் பறக்கவிட்டு வெறுமையின் களி நிறைக்கும் குளிர்க்காற்று வேளிமலை அடுக்குகள் மீது மேகங்கள் இறங்கி இருந்தன.

இரவெல்லாம் காற்றின் ஊளை, தென்னைகள் பேய்ப் பிடித்துக் கூந்தல் சுழற்றி ஆடின. சன்னல்களில் ஒன்றை மட்டும் திறந்து வைத்துப் படுத்திருந்தேன். அணை மதகு எனப் பீறிட்ட காற்றில் கொசுவலை கொந்தளித்து. கனவுகளுக்குள் என் மேல் ஓர் அருவி பெய்து கொண்டிருந்தது. இதோ சற்று முன் பேரொலியுடன் வானம் உடைந்து விழுவது போல முதல் மழை. அறைபட்டுத் துடிக்கும் இலைகளுக்கு மேல் கண்ணாடிச் சரடுகள் போல மழை நிலைத்திருக்கிறது. இடவப்பாதித் தொடங்கி விட்டது.

– ஜெயமோகன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் கன்னியாகுமரி மாவட்டம் அருமனையில் 22.04.1962–இல் பிறந்தார். பள்ளிநாட்களிலேயே சிறுகதை எழுத ஆரம்பித்தவர். அவரது முதல் கதை ரத்தினபால என்ற சிறுகதை இதழில் வெளிவந்தது. தமிழகத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவராகத் திகழ்பவர். தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் எழுதி வருகிறார். 'வெண்முரசு, விஷ்ணுபுரம், கொற்றவை, காடு' போன்றவை அவரது குறிப்பிடத்தக்க படைப்புகள் ஆகும். கதாவிருது, இயல்விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - திரண்டு பெருகி
  - நெருங்கி வந்தது
  - அறையெங்கும்
  - இரவெல்லாம்
- பொருள் எழுதுங்கள்
  - சாளரம்
  - வெக்கை
  - மதகு
  - களி
- உங்களுக்கு மழையில் நனைந்த அனுபவம் உண்டா? அதைக் குறிப்பாக எழுதுங்கள்.
- மலையாள மாதங்களையும் அதற்கு இணையான தமிழ் மாதங்களையும் கண்டறிந்து அட்டவணைப்படுத்துங்கள்.

# கூதிர் காலம்



## பனி

விண்ணி ருந்து பூக்க ளாக
மழை விழுந்தது!– இம்
மண்ணெல் லாமும் வெள்ளைப் பூக்கள்
போர்வை யானது!

மலையின் மீதும் மரங்கள் மீதும்
வெண்மை படர்ந்தது! – நல்
விலையில் லாத விந்தை அழகால்
விரிந்து சிறந்தது!

படர்ந்து பனியின் பளப ளப்பைப்
பார்க்க இன்பமே! – நம்
உடலை வாட்டும் கொடிய குளிரால்
உயரும் துன்பமே!

குளிரைப் போக்க ஆடை பலவும்
அணிந்து கொள்ளலாம்! – நாம்
குளிரில் லாமல் பனியில் திரிந்து
கூடி ஆடலாம்!

**கூதிர் காலம்**

ஐப்பசி,
கார்த்திகை
மாதங்கள்

படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி

**ஆசிரியர் குறிப்பு** இவர் 1961–ஆம் ஆண்டு பிறந்தார். படைத்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தற்போது ஆர்க்காட்டில் வசித்து வருகிறார். கவிதைகள், கதைகள் பல எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடலை வாசித்து முதல் மற்றும் இரண்டாவது எழுத்து ஒரேபோல் வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்
- அகர முதலியைப் பார்த்துப் பொருள் எழுதுங்கள்.
  - விண்
  - விந்தை
  - கூதிர்
  - ஆடை
  - வெண்மை
- பிரித்து எழுதுங்கள்.
  - விலையில்லாத
  - வெள்ளைப் பூக்கள்
  - குளிரில்லாமல்
  - மண்ணெல்லாம்

## கொடைக்கானல்

கோடை வெயிலின் கொடுமையைத் தணிக்கக் குளிர்ச்சியான இடங்களைத் தேடி அலைபவர் பலருண்டு. அத்தகைய எழில்மிகு இடங்கள் மலைப்பகுதிகளிலேயே அதிகம் காணப்படுகின்றன. அவை உடலுக்குக் குளிர்ச்சியையும் மனதுக்கு மகிழ்ச்சியையும் தருகின்றன. அவ்வாறு மக்கள் விரும்பிச் செல்லும் கோடை வாழிடங்களில் புகழ் பெற்றது கொடைக்கானல் ஆகும்.

'மலைகளின் இளவரசி' எனப் புகழப்படும் கொடைக்கானல் மலை, மேற்குத் தொடர்ச்சி மலையில் ஏலக்காய் மலைக்கும் பழனி மலைக்கும் இடையில் அமைந்துள்ளது. பழனி வழியாகவும் மதுரையிலிருந்து வத்தலக்குண்டு



வழியாகவும் கொடைக்கானலுக்கு வர வழியுண்டு. கடல் மட்டத்திலிருந்து 2133 மீட்டர் உயரத்தில் கொடைக்கானல் அமைந்துள்ளதால் இங்கு எப்பொழுதும் குளுகுளுவென இருக்கும். 1845–ஆம் ஆண்டு மதுரை அமெரிக்கக் கிறித்தவ சபையினர் கொடைக்கானல் மலையில் முதலில் வீடுகளைக் கட்டி வசிக்க ஆரம்பித்தார்கள். அது முதல் கொடைக்கானல் வளர்ச்சியடைந்து சிறந்த சுற்றுலாத் தலமாகவும் கோடை வாழிடமாகவும் விளங்குகிறது. இதன் மையப்பகுதியில் அமைந்துள்ள கொடைக்கானல் ஏரி 1883–இல் வெட்டப்பட்டது.



கொடைக்கானல் மலையின் தொடக்கமே நமது மனதை அள்ளும் இடமாக விளங்குகிறது. இங்கிருந்து வளைந்து வளைந்து செல்லும் கொண்டை ஊசி வளைவுகளில் ஊர்திகள் ஊர்ந்து செல்லும் அழகே தனிதான். இருமருங்கிலும் பச்சைப்பட்டாடை தரித்த மலைத் தொடர்கள், பசுமையான செடி கொடிகள், பழ மரங்கள், தேயிலைத் தோட்டங்கள், சலசலக்கும் நீரோடைகள், ஆரஞ்சு, பெர்ரி, பிளம்ஸ் மரத்தோப்புகள் அணி வகுத்து நிற்பது கண்கொள்ளாக் காட்சியாகும். அங்குள்ள செங்குத்துப் பாறைகள் நம் சிந்தனையைக் கலக்கும்; வானளாவிய யூக்கலிப்டஸ் மரங்கள் படைவீரர்கள் போல் அணி வகுக்கும்; வான் மேகம் மஞ்சுவாக நம் மடியில் வந்து தாலாட்டும், சில்லென்ற குளிர்க்காற்று நம் செவியைத் துளைக்கும். எங்கெங்கு நோக்கிலும் பசுமைக்காட்சிகள் நம்மைப் பரவசப்படுத்தும். கொடைக்கானல் அழகுக்கு நிகர் கொடைக்கானல் தான்.



கொடைக்கானலின் நடுமையமாக ஐந்து கி.மீ. சுற்றளவுள்ள கொடைக்கானல் ஏரி அமைந்து சிறப்புச் சேர்க்கிறது. இங்குச் சிறுவர் முதல் பெரியோர் வரை தாமே துடுப்பு போட்டுப் படகோட்டி மகிழலாம். எந்திரப்படகுகளும் தேவைக்கேற்ற அளவில் கிடைக்கின்றன. வெள்ளி அருவி, தொப்பி தூக்கிப்பாறை, தூண் பாறை, குணா குகை, பசுமைப் பள்ளத்தாக்கு, தாமஸ் கோக்கர் நடை பாதை, பைன் மரத்தோப்புகள், செட்டியார் பூங்கா, பேரி ஜாம் ஏரி, அமைதிப் பள்ளத்தாக்குப் போன்றவை காணத்தக்க இடங்களாகும்.

நாகரிக உலகில் மனிதன் இயற்கையை அழித்து செயற்கையாகப் பலவற்றை உருவாக்கி வருகிறான். ஆனாலும் இயற்கையான மலைகள், அருவிகள் போன்றவற்றுக்கு நிகர அவனால் ஒன்றையும் உருவாக்க முடியவில்லை. இயற்கை என்றும் இமயம் போல் உயர்ந்து நிற்கிறது. நாம் இயற்கையை அழிக்காமல் அது தரும் இன்பத்தை நுகர்வோம். கொடைக்கானல் போன்று இயற்கை நமக்கு வழங்கியுள்ள அருட்கொடைகளைக் காத்து இன்புறுவோம்.

– அ. ஜாண் ஜோசப்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடையளியுங்கள்.
  - மலைகளின் இளவரசி எனப் புகழப்படும் இடம் எது?
  - கொடைக்கானல் கடல் மட்டத்திலிருந்து எத்தனை மீட்டர் உயரத்தில் உள்ளது?
  - எந்த வருடம் கொடைக்கானல் ஏரி உருவாக்கப்பட்டது?
- சொற்சூரியனை முழுமையாக்குங்கள்.




- கேரளத்திலுள்ள மலைவாழ் சுற்றுலாத் தலங்களின் பெயர்களைப் பட்டியலிடுங்கள்.
- இணையத்தின் உதவியோடு மூணாறு குறித்துள்ள தகவல்களைத் திரட்டிக் குறிப்பு எழுதுங்கள்.
- நீங்கள் சுற்றுலா சென்ற அனுபவத்தைக் குறிப்பாக எழுதுங்கள்.
- இன்றைய காலகட்டத்தில் சுற்றுலா தலங்கள் பல்வேறு வகையால் அழிவுகளை நேரிடுகின்றன. அதனைத் தடை செய்ய உதவும் வகையிலான முத்திரை வாக்கியங்களை எழுதுங்கள்.

## குளிரில் நின்றால் பரிசு..!



ஒரு நாள் இரவு நேரத்தில் அக்பரும் பீர்பாலும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். குளிர் அதிகமாக இருந்ததால் சால்வையை இறுக்கமாக இருவரும் போர்த்திக் கொண்டிருந்தனர். அப்படியும் குளிர் அக்பரை மிகவும் வாட்டியெடுத்தது.

அக்பர் பீர்பாலைப் பார்த்துப் "பீர்பால் இந்தக் குளிரின் கொடுமையைப் பார்த்தீரா? எதிரிகளுக்கு அஞ்சாத நெஞ்சம் இருந்தும் இந்தக் குளிருக்கு அஞ்சாமல் இருக்க முடியவில்லையே! இந்தக் குளிரைப் பொருட்படுத்தாமல், யமுனை ஆற்றில் ஓர் இரவு முழுக்க, கழுத்தளவு நீரில் யாருக்காவது நிற்க இயலுமோ! அவ்வாறு நின்றால் அவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசாக வழங்கலாம் " என்றார்.

"அரசே, சிங்கத்தின் முடியைக் கூட கொண்டு வந்துவிடலாம். ஆனால் நடுங்கும் குளிரில் இரவு முழுவதும் ஆற்றில் நிற்பது என்பது சாதாரண காரியமா?" என்றார் பீர்பால். "யமுனை ஆற்றில் குளிரில் நிற்பதற்கு எந்தவித திறமையும் தேவையில்லை. மன உறுதி இருந்தாலே போதும். நாடு முழுவதும் இந்தச் செய்தியை அறிவிக்கச் சொல்லுங்கள்! பணத்தின் மீது ஆசைப்பட்டு நிறையபேர் பங்கு பெற வருவார்கள். அதில் யார் வெற்றி பெறுவார்கள் எனப் பார்ப்போம்" என்றார் அக்பர்.

அரசரின் ஆணை நாடெங்கும் அறிவிக்கப்பட்டது. அடுத்த நாளே, ஓர் இளைஞன் அரசரிடம் வந்து "அரசே, யமுனை நதியில் கழுத்தளவு நீரில் இரவு முழுவதும் நிற்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்" என்றான்.

அக்பர் அந்த இளைஞனை வியப்பாகப் பார்த்து "இன்று இரவு போட்டிக்குத் தயாராகு" என்றார். இளைஞனும் தயாரானான். நடுங்கும் குளிரில் நிற்பது சாதாரண விசயமில்லையே என நினைத்த அக்பர், அந்த இளைஞனைக் கண்காணிப்பதற்கு இரண்டு காவலாளிகளை நியமித்தார்.

யமுனை ஆற்றில் வெற்று உடம்புடன் இறங்கினான் இளைஞன். கழுத்தளவு வரை நீர் உள்ள இடத்தில் நின்று கொண்டான். உடல் மிகவும் நடுங்கியது; குளிர் வாட்டியது; அவனால் தாக்குப் பிடிக்கமுடியவில்லை. ஆனாலும் பரிசாகக் கிடைக்கப்போகும் ஆயிரம் பொற்காசுகளை எண்ணிப் பார்த்தான். புது தெம்பு வரவே, இரவு முழுவதும் கண் விழித்து நின்று கொண்டிருந்தான்.

பொழுது விடிந்தது. வெயில் மேனியில் பட உடல் சீரான நிலைக்கு வந்தது. ஆயிரம் பொற்காசுகளைப் பெறப்போகிறோம் என்ற மகிழ்ச்சியில் ஆற்றை விட்டு மேலே வந்தான். அவனைக் காவலாளிகள் மன்னரிடம் அழைத்துச் சென்று இரவு முழுவதும் இளைஞன் கழுத்தளவு நீருக்குள் நின்றதைக் கூறினார்கள்.

அக்பருக்கோ மிகவும் வியப்பாக இருந்தது. "இளைஞனே உன் மன உறுதியைப் பாராட்டுகிறேன். அந்த இரவில், கடுங்குளிரில் நீருக்குள் எப்படி இருந்தாய்? அப்படி நிற்கும்போது உனக்கு எந்த வகையிலும் ஏதாவது துணையாக இருந்ததா?" என்றார் அக்பர். அந்த இளைஞனும் அப்பாவியாய் "அரசே அரண்மனையின் மேல் மாடத்தில் எரிந்து கொண்டிருந்த சிறிய விளக்கின் ஒளியைப் பார்த்துக்கொண்டே இரவுப்பொழுதைக் கழித்தேன்" என்றான்.

"இளைஞனே! அதானே பார்த்தேன். நடுங்கும் குளிரில் தண்ணீருக்குள் எப்படி உன்னால் இருக்க முடிந்தது என்று இப்பொழுது புரிகிறது! உன் குளிரைப் போக்க அரண்மனையிலிருந்து வீசிய விளக்கின் ஒளி உனக்கு உதவி செய்திருக்கிறது. அந்தச் சூட்டில் தான் இரவு முழுவதும் நின்றிருக்கிறாய். எனவே உனக்கு ஆயிரம் பொற்காசுகள் கிடையாது" என்றார்.

பரிசுத்தொகை கிடைக்கவில்லை என்றதும் அந்த இளைஞன் மிகவும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றான். பீர்பால் அவனைக் கண்டு என்னவென்று விசாரிக்க இளைஞனும் பீர்பாலிடம் எல்லாவற்றையும் சொன்னான். பீர்பால் அவனுக்கு ஆறுதல் கூறி, பரிசுத் தொகையைக் கிடைக்க உதவி செய்வதாக உறுதியளித்தார். சில நாட்களுக்குப் பிறகு, அக்பர் வேட்டையாடப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். பீர்பாலைத் தம்முடன் அழைத்துச் செல்ல எண்ணிய அக்பர் காவலாளியைக் கூப்பிட்டு, பீர்பால் வீட்டுக்குச் சென்று அவரை அழைத்து வரச் சொன்னார்.

பீர்பால் தன்னைத் தேடி வந்த காவலாளியிடம் தான் சமையல் செய்து கொண்டிருப்பதையும் சாப்பிட்டுவிட்டு வருவதாகவும் கூறினார். நீண்ட நேரம் பீர்பாலுக்காக அக்பர் காத்திருந்தார். பீர்பால் வரவில்லை. மிகவும் கோபமடைந்த அரசர் பீர்பாலின் வீட்டுக்குச் சென்று பார்த்துவிட்டு வரலாம் எனப் புறப்பட்டார். பீர்பால் வீட்டில் ஒரு பாத்திரத்தில் அரிசியைப் போட்டுத் தண்ணீர் ஊற்றி வைத்திருந்தார். பாத்திரத்திலிருந்து பத்தடி தூரம் தள்ளி அடுப்பை வைத்திருந்தார். அடுப்பில் விறகுகள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. இதைக் கண்ட அக்பருக்கு ஒன்றும் புரியவில்லை. பீர்பாலிடமே கேட்டார்.

"பீர்பால் தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

"அரசே சமையல் செய்து கொண்டிருக்கிறேன்"

"உமக்கு என்ன மூளை குழம்பி விட்டதா? பாத்திரம் ஒரு பக்கம் இருக்கிறது. அடுப்பு ஒரு பக்கம் இருக்கிறது. அதில் எப்படிச் சோறு வேகும்?" என்றார் அக்பர் கோபத்துடன்.

"அரசே நிச்சயம் சோறு வேகும். யமுனை ஆற்றில் தண்ணீரில் இருந்தவனுக்கு அரண்மனையில் இருந்த விளக்கின் வெளிச்சம் சூட்டைத் தந்திருக்கும்போது மிகவும் பக்கத்தில் இருக்கிற அடுப்பில் ஏற்படும் சூடு அரிசிப் பாத்திரத்தில் பட்டும் சோறு வெந்து விடாமல் போகுமா?" என்றார் பீர்பால்.

மிகவும் நாசூக்காகத் தமக்குப் புரிய வைத்த பீர்பாலைப் பாராட்டி, அந்த இளைஞனை வரவழைத்து முன்பு கூறியபடியே ஆயிரம் பொற்காசுகளைக் கொடுத்தார் அக்பர்.

– ஜெயந்தி

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து வினாக்களை உருவாக்குங்கள்.
  - எ.கா : அக்பருடன் உரையாடிக்கொண்டிருந்தவர் யார்?
  - ..........................................................................................
  - ..........................................................................................
  - ..........................................................................................
- பாடப்பகுதியை வாசித்துக் கதாபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து நாடகமாக நடித்துக்காட்டுங்கள்.
- அகர முதலியைப் பயன்படுத்திப் பொருள் எழுதுங்கள்.
  - வியப்பு
  - நாசூக்காக
  - சால்வை
  - மேனி
- பிரித்து எழுதுங்கள்
  - வாட்டியெடுத்தது
  - கழுத்தளவு
  - பரிசுத்தொகை
- குளிர் காலத்தில் உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க நீங்கள் கூறும் கருத்துக்களை எழுதுங்கள்.
- வெளிநாட்டில் வேலை செய்து வரும் நபரிடம் அங்குள்ள காலநிலைகளைக் குறித்து நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.

அலகு 2

# ஒற்றுமையே வலிமை



பல குடும்பங்கள் இணைந்ததே ஒரு சமூகம். இச்சமூகத்தின் அங்கத்தினர்களாகிய நாம் அனைவரும் சமூக நலனில் அக்கறை உள்ளவர்களாக மாற வேண்டும். நல்லொழுக்கம் நல்மனிதர்களை உருவாக்குவதால் அன்பு, இரக்கம், விட்டுக் கொடுக்கும் தன்மை போன்ற நற்குணங்களைக் குழந்தைப் பருவத்திலிருந்தே கற்றுக் கொள்ள வேண்டும். அனைவரும் அன்புடனும் ஒற்றுமையுடனும் செயல்பட்டால் சமூகம் முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை.

# நற்குணங்கள்



## பிறந்த நாள் பரிசு

**காட்சி – 1**

நாடக மாந்தர்கள்: மனோன்மணி, சூசை, ரோசி, சுமதி, சுமதியின் அம்மா

மனோன்மணி : என்னடி ரோசி? ஏன் ஒரு மாதிரி இருக்கே? பிறந்த நாள் அதுவுமா இப்படிச் சோகமே உருவெடுத்தாற் போல இருக்கக்கூடாது. மகிழ்ச்சியாக இருக்கணும்

சூசை : ஆமாம் மனோன்மணி. நீ சொல்வது ரொம்ப சரி. சாக்லெட் கொடுத்து நம்மையெல்லாம் மகிழ்ச்சியாக இருக்க விட்டுட்டு, ஏன் ரோசி நீ மட்டும் ஒரு மாதிரியாக இருக்கே?

ரோசி : நீ சொல்றது எல்லாம் சரி சூசை. காலையில் இருந்து நான் மகிழ்ச்சியாகத்தான் இருந்தேன். இப்போ.....

மனோன்மணி : இப்போ வீட்டுக்குப் போகிற நேரத்திலே உனக்கு என்ன வந்துட்டதாம்?

ரோசி : ஒன்றுமில்லை. உங்களுக்கு எல்லாம் கொடுத்தது போலவே சுமதியிடம் சென்று, அவளுக்கும் ஒரு சாக்லேட் கொடுத்தேன். அத அவ என்ன செய்தாள் தெரியுமா? சாக்லேட்டை வீசி எறிந்ததோடு இல்லாமே என்னை என்ன சொன்னா தெரியுமா?

சூசை : என்ன சொல்லியிருப்பா....... சே... சே... இதெல்லாம் எனக்கு வேண்டாம்னு சொல்லியிருப்பா.

ரோசி : அப்படிச் சொன்னாலும் பரவாயில்லை. "பெரிய ராணி இவ. இவளுக்குப் பிறந்தநாள் வந்துட்டதாம் பிறந்தநாள். பொல்லாத சாக்லேட் கொடுக்க வந்துட்டா. போடி... போ... போ..." என்றெல்லாம் சொன்னாள்.

சூசை : சுமதியின் பேச்சு நம்ம எல்லோருக்கும், ஏன் ஆசிரியருக்குக் கூட தெரியும். தான் பணக்காரி என்று எல்லோரையும் உதாசீனமாகப் பேசுவா. இது உனக்குத் தெரியாதா என்ன?

மனோன்மணி : நேற்றுக் கூட என்னிடம் வலுச்சண்டைக்கு வந்தா. என்னைக் கிள்ளிக்கிட்டே இருந்தா. ஆசிரியரிடம் சொல்லலாம்னு எழுந்து நின்றேன். அதற்குள் சுமதி திடுப்பென்று எழுந்து "ஸார்... மனோன்மணி பேசாமயிருக்கமாட்டேங்கிறா... என்னைக் கிள்ளிக் கொண்டேயிருக்கிறாள்.." என்று வாய்க் கூசாம புளுகினாள். ஆசிரியர் என்னையல்லவா? கண்டித்தார்.

ரோசி : சுமதி, இப்படி எல்லாருடைய மனதையும் நோக வைக்கிறாளே. அதனாலே அவளுக்கு என்ன லாபம்?

சூசை : லாபமா? அது அவளுக்கு ஒரு விளையாட்டா இருக்கு. அப்படித்தான் போனவாரம் முத்துவோட புத்தகத்தைச் சுமதி எடுத்தாள். முத்து புத்தகத்தைத் தேடினபோது மெதுவா அந்தப் புத்தகத்தை என் பையிலே போட்டாள்.

ரோசி : அப்படியா! பிறகு என்ன நடந்தது?

சூசை : நல்ல வேளை சுமதி முத்துவினுடைய புத்தகத்தை என் பையிலே போடுவதை ஆசிரியர் பார்த்துக் கொண்டிருந்தார். கையும் களவுமாக மாட்டிக் கொண்டாள்.

மனோன்மணி : பிறகு என்ன நடந்தது?

சூசை : பிறகு என்ன? சுமதிக்குச் சரியான தண்டனை கிடைத்தது.

ரோசி : அப்போ, சுமதியைத் திருத்தவே முடியாதா?

சூசை : ஏன் இல்லை? சமயம் வரட்டும்னு காத்திட்டு இருக்கேன்.

பள்ளிக்கூட மணி ஒலிக்கிறது

மனோன்மணி : வாருங்கள் போகலாம்.

## காட்சி – 2

| | | |
|---|---|---|
| இடம் | : | மனோன்மணியின் வீடு |
| நேரம் | : | மாலை |
| தோன்றுவோர் | : | மனோன்மணி, சுமதி<br>(சுமதி மனோன்மணியின் வீட்டிற்கு வருகிறாள்.) |
| சுமதி | : | மனோன்மணி! மனோன்மணி! |
| மனோன்மணி | : | யாரது சுமதியா? |
| சுமதி | : | சுமதியேதான். இன்னிக்கு என்ன விளையாட்டு விளையாடலாம்? கண்ணாமூச்சி விளையாடலாமா? |
| மனோன்மணி | : | அதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். இப்போ நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொன்னாத்தான் உன்னோடு பேசுவேன்; விளையாடுவேன். |
| சுமதி | : | அடேயப்பா..... என்ன கேள்வி அது? கேளேன். |
| மனோன்மணி | : | இன்று ரோசியின் பிறந்த நாள் என்பது உனக்குத் தெரியுமா? இல்லையா? |
| சுமதி | : | ஓ! நல்லா தெரியுமே, ரோசி நேற்றே சொல்லிட்டு இருந்தாளே. |
| மனோன்மணி | : | அப்படியிருக்கும்போது அன்பாக ஆசையாக ரோசி உன்னிடம் கொடுத்த சாக்லேட்டை ஏண்டி வீசி யெறிஞ்சே? அதனாலே ரோசி எவ்வளவு நேரம் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தா தெரியுமா? பாவம்! |
| சுமதி | : | பாவமா? அவ ஏன் வேதனைப்படனும்? எனக்கு அந்த மட்டமான சாக்லேட் எல்லாம் பிடிக்காது. |
| மனோன்மணி | : | உனக்குப் பிடிக்கலேன்னா சாப்பிடாம இருந்திடணும். வீசியெறிந்து, கேலிபண்ணி ரோசியின் மனதைப் புண்படுத்தியிருக்கக் கூடாது. |
| சுமதி | : | பின்னே என்னவாம்? பெரிய ராணி போல பிறந்த நாள் கொண்டாட வந்துட்டாளாம். பிறந்த நாளுக்கு ஓர் அழைப்பிதழ் உண்டா? இல்லை லட்டு, முறுக்கு ஏதாவது ஒன்று உண்டா? அதுவும் இல்லே. |
| மனோன்மணி | : | அன்போடு பிறர் கொடுப்பதை நாம் வாங்கிக் கொள்ள வேண்டுமே தவிர, நமக்கு விருப்பமானதையெல்லாம் மற்றவங்க கிட்டே எப்படி எதிர்பார்க்க முடியும்? |
| சுமதி | : | சும்மா நிறுத்திக்கோ. அடுத்த வாரம் எனக்குப் பிறந்த நாள் வருகிறது. எப்படிக் கொண்டாடுகிறேன் பாரு! |
| மனோன்மணி | : | அதெல்லாம் சரி. பிறருக்குத் துன்பம் கொடுப்பதை நிறுத்தி விடு. |

## காட்சி – 3

இடம் : ரோசியின் வீடு

நேரம் : காலை

தோன்றுவோர் : ரோசி, மனோன்மணி, சூசை.

(மனோன்மணியும் ரோசியும் பேசிக்கொண்டிருக்கும் போது சூசை வருகிறான்.)

ரோசி : வா மனோன்மணி! என்ன அது கையில்?

மனோன்மணி : ஓ இதுவா? சுமதியின் பிறந்தநாள் விழா அழைப்பிதழ். சுமதி உன்னை அழைத்தாளா?

ரோசி : அழைத்தாள்.... அழைத்தாள்....

மனோன்மணி : ஏன் இழுத்தாற்போலே சொல்றே?

ரோசி : போனவாரம் என் பிறந்தநாளன்று சுமதி நடந்துகொண்டதை நினைச்சேன்.

மனோன்மணி : அதையெல்லாம் இப்போ நினைக்கக்கூடாது.

சூசை : நீங்க ரெண்டுபேரும் என்ன திட்டம் போட்டுக்கொண்டு இருக்கீங்க? சுமதிக்குப் பிறந்தநாள் பரிசாக என்ன கொடுக்கலாம்னு யோசிக்கிறீங்களா?

ரோசி : ஆமா! அதான் குறை. அவளுக்குப் பரிசு வேற கொடுக்கணுமா? சுமதிக்குப் பாடம் கற்பிக்கப்போறேன்னு சொன்னியே..... எல்லாவற்றையும் மறந்திட்டியா?

சூசை : சமயம் வந்துவிட்டது. நாளைக்குச் சுமதியின் பிறந்த நாள் இல்லையா?

ரோசி : ஆமாம். ஞாயிற்றுக்கிழமை நமக்கு விடுமுறையுங்கூட?

சூசை : இதுதான் சரியான சமயம்! நீ, மனோன்மணி இன்னும் சுமதி யார் யாருக்கு அழைப்பிதழ் கொடுத்தாளோ அவங்க எல்லாரும் நாளை பள்ளிக்கூடம் வந்துடணும்!



மனோன்மணி : நாளைக்குப் பள்ளிக்கூடம் விடுமுறையாச்சே.

சூசை : அதனாலேதான்சொல்றேன். பிறந்த நாள் அதுவுமா, சுமதி நம்மை எல்லாம் எதிர்பார்த்திட்டு அவ வீட்டிலே காத்திட்டு

இருப்பா. நாம் யாரும் அவ வீட்டுக்குப் போகக்கூடாது. அதே நேரத்தில் நம்ம வீட்டிலேயும் நாம் இருக்கக்கூடாது. பள்ளிக்கூட மைதானத்திலே கூடணும். நம்ம யாரும் போகாம சுமதி தத்தளிப்பாள். அவ கர்வம் அடங்கும்.

ரோசி : நல்ல யோசனை. அதன்படியே செய்கிறோம்.

**காட்சி – 4**

இடம் : சுமதியின் வீடு

நேரம் : காலை

தோன்றுவோர் : சுமதி, சுமதியின் அம்மா.

(பிறந்தநாள் கேக் மற்றும் பலகாரங்கள் எல்லாம் மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ளன.யாரும் வராததால் சுமதி வருத்தத்தோடு உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அவள் அம்மா வருகிறார்.)



சுமதியின் அம்மா : சுமதி எங்கே உன் நண்பர்கள் எல்லாம்? யாரையும் காணோமே! மணி பன்னிரெண்டாயிடுச்சு. இனிமே எப்போ கேக் வெட்டறது?

சுமதி : கொஞ்சம் இரும்மா வந்திடுவாங்க.

சுமதியின் அம்மா : என்னமோ? எனக்கு நல்லதா தெரியல. பிறந்தநாள் அதுவுமா இப்படியா நீ பட்டினி கிடப்பது?

சுமதி : பெரிய விருந்துன்னு சொல்லியிருந்தேன்.என் நண்பர்கள் எல்லாம் வந்து சாப்பிட்டாதானே எனக்குப் பெருமை. இரும்மா வந்திடுவாங்க.

சுமதியின் அம்மா : இன்னும் ஏன் ஒருத்தரகூடக் காணோம்?

சுமதி : கொஞ்சம் பொறுங்கம்மா. நான் மனோன்மணி வீட்டுக்குப் போயிட்டு வரேன்.

(சுமதி செல்கிறாள். பின்னர் தனியே திரும்பி வருகிறாள்.)

சுமதியின் அம்மா : என்ன சுமதி? இப்படி மூச்சு வாங்க ஏன் ஓடிவர்றே? ஏன் இந்தப் பலகாரங்களையெல்லாம் பையிலே போடறே?

சுமதி : மெதுவான குரலில் அம்மா நான் மனோன்மணி, ரோசி, சூசை மற்றும் பக்கத்திலே இருக்கிற நண்பர்கள் வீட்டுக்கு எல்லாம் போனேன். யாரும் வீட்டிலே இல்ல.

சுமதியின் அம்மா : எங்கே போயிருக்காங்க?

சுமதி : எங்கே போயிருக்காங்கன்னு நான் தெரிஞ்சுக்கிட்டுத் தான் வந்திருக்கேன் அம்மா. என்னுடைய கர்வத்தையடக்க, எனக்கு ஒரு பாடம் கற்பிக்க யாரும் வரக்கூடாதென்னு முடிவு செய்துட்டாங்களாம். வீட்டிலே இருந்தால் நான் போய்க் கூப்பிடுவேன்னு எல்லாரும் பள்ளிக்கூட மைதானத்தில் இருக்காங்களாம். அதனாலே தான் இந்தப் பலகாரங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு போய் அவர்களுக்குக் கொடுக்கப் போறேன். என் தவறுதல்களுக்கு மன்னிப்பு கேட்கப் போறேன்.

சுமதியின் அம்மா : என் கண்ணு! உனக்கு நல்ல புத்தி வந்துட்டுதம்மா. உன் விருப்பப்படியே செய்!

(சுமதி பலகாரப் பையுடன் செல்கிறாள்)

## காட்சி – 5

இடம் : பள்ளிக்கூட விளையாட்டுத் திடல்

நேரம் : காலை

தோன்றுவோர் : மனோன்மணி, சூசை, ரோசி, சுமதி மற்றும் சில தம்பி, தங்கைகள்.

(சுமதி பலகாரப் பையுடன் வருகிறாள்)

மனோன்மணி : என்ன சுமதி? இங்கே எப்படி வந்தே?

சுமதி : எல்லாம் உங்களைத் தேடித்தான் வர்றேன். சூசை, ரோசி, மனோன்மணி என்னை நீங்கள் எல்லோரும் மன்னிக்க வேண்டுகிறேன். இனி நான் எல்லோரிடமும் அன்பாயிருப்பேன். தயவுசெய்து இந்தப் பலகாரங்களையெல்லாம் சாப்பிடுங்க.

(மெதுவாகச் சுமதி அழுகிறாள்)

சூசை : வருத்தப்படாதே சுமதி! உன்னை அழ வைக்க வேண்டும் என்பது எங்கள் நோக்கம் இல்லே! உன்னை நல்லவளா திருத்த வேண்டும் என்பதுதான் எங்கள் ஆசை!

ரோசி : ஆமாம் சுமதி. இப்போ நீ நல்லா திருந்தியிட்டே.

சூசை : பலகாரம் எதுவும் எங்களுக்கு வேண்டாம்! அப்படியே எடுத்துக்கோ.

சுமதி : இன்னும் என்மீது உள்ள கோபம் போகவில்லையா?

சூசை : ஐயோ சுமதி! பலகாரங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்கே போய்ச் சாப்பிடலாம்னு சொல்றேன்.

மனோன்மணி : ஆமாம் சுமதி. இப்போ நாங்க எல்லோரும் உங்க வீட்டிற்கு வருகிறோம்.

ரோசி : வயிறார விருந்துண்டு, உன்னை வாழ்த்துகிறோம்.

சுமதி : எனக்கு இப்போ எவ்வளவு மகிழ்ச்சியா இருக்குத் தெரியுமா? உங்களுக்கு எல்லாம் ரொம்ப நன்றி. வாங்க எல்லோரும் வீட்டுக்குப் போகலாம்.

(சுமதி செல்கிறாள். அவளைத் தொடர்ந்து அனைவரும் செல்கின்றனர்.)

– முனைவர் சு. சௌந்தரராஜன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் குழந்தைகளுக்கான பல்வேறு கதைகளையும் நாடகங்களையும் இயற்றியுள்ளார். பிறந்தநாள் பரிசு என்ற நாடகம் தாயின் கட்டளை என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## செயல்பாடுகள்

- உங்கள் பிறந்தநாளைக் கொண்டாடிய அனுபவத்தை வகுப்பில் கலந்துரையாடுங்கள்.
- இந்த நாடகத்தில் உங்களுக்குப் பிடித்தமான கதாபாத்திரம் யார்? ஏன்?
- சுமதியைப் போன்ற கதாபாத்திரத்தை நீங்கள் சந்தித்ததுண்டா?
- இப்பாடப்பகுதியில் வரக்கூடிய பேச்சுவழக்குச் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- சுமதியின் குணத்தை மாற்ற தோழிகள் கையாண்ட வழி என்ன? என்பதை வாசித்துக் கண்டறியுங்கள். எழுதுங்கள்
- வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.
  - ஒன்றுமே தெரியாதது போல
  - சரியான பாடம் கற்பிக்க
- இந்நாடகத்தைக் கதையாக மாற்றி எழுதுங்கள்.
- உன் பிறந்த நாள் விழாவிற்கு உன் தோழி/ நண்பனை அழைப்பதற்காக ஓர் அழைப்பிதழ் கடிதம் எழுதுங்கள்.
- இந்நாடகத்தில் வரும் கதாபாத்திரங்களை ஏற்று வகுப்பறையில் நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.
- பிறந்த நாள் வாழ்த்து மடல் ஒன்றைத் தயார் செய்து பிறந்த நாள் கொண்டாடும் நண்பர்களுக்குப் பரிசளியுங்கள்.

## மாணவர்க்கு

பள்ளி செல்லும், தம்பி !
பயன்பெறு வழியைச் சொல்வேன்.
நல்ல மாணவ னாய்நீ
நாட்டில் இலங்க வேண்டும்.
அன்பாய்ப் பழகும் தன்மை,
அடக்கமாய் நடக்கும் பழக்கம்,
பண்பாய்ப் பேசும் பேச்சு,
பாங்குறச் செய்யும் இவைதாம்.
நல்லதைப் பேசுக; வீட்டில் !
உள்ளதை உண்டு மகிழ்க !
அல்லதை மறக்க என்றும்
அறிவுடன் திகழ்ந்து வாழ்க !
கற்ற வழிதனில் சென்று
கடமையும் நேர்மையும் கொண்டு,
நற்றமிழ் ஆர்வம் பெருக
நற்றொண்டில் திளைக்க வேண்டும்.
உள்ளத்தில் உண்மை வேண்டும்,
உடுப்பதில் வெண்மை வேண்டும்,
இல்லத்தில் இன்பம் பெருக
எளிமையில் நல்லறம் வேண்டும்.
இன்னல் செய்த பேர்க்கும்
இனிய செய்திடல் வேண்டும்



கன்னல் மொழிதனைப் பேசிக்
கருத்தைக் கவர வேண்டும்.
ஒழுக்கம் உயரப் பெற்றால்,
உழைப்பில் உண்மை கண்டால்,
இழுக்கம் வாரா, தம்பீ !
இன்பமாய் வாழ லாமே!

– பி.வி.கிரி

**ஆசிரியர் குறிப்பு** இவர் 1938–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2–ஆம் தேதி திருவள்ளூர் மாவட்டத்தில் கடம்பத்தூர் என்ற ஊரில் பிறந்தார். இவர் பல ஆண்டுகள் பத்திரிகைத் துறையில் பணியாற்றினார். குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய போட்டியில் ஆடுவோமே பள்ளு பாடுவோமே என்ற கவிதை நூலிற்கு ஏ.வி.எம் அறக்கட்டளையின் முதற்பரிசான தங்கப் பதக்கத்தை 1975–ஆம் ஆண்டு பெற்றார்.

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- நல்ல மாணவராகத் திகழக் கவிஞர் கூறும் கருத்துகளைக் கவிதையிலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்.
- "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற பழமொழியைப் போன்ற குணநலன்கள் உணர்த்தும் பிற பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- "இன்னல் செய்த பேர்க்கும்
  இனிய செய்திடல் வேண்டும்" – இக்கருத்திற்கு இணையான திருக்குறளைக் கண்டுபிடியுங்கள்.
- அகரமுதலியைப் பார்த்துப் பொருள் கண்டறியுங்கள்.
  - இலங்க
  - பாங்கு
  - இழுக்கம்
  - நேர்மை
  - இல்லம்
  - கன்னல்
  - இன்னல்
- கவிதை வரிகளை வாசித்துக் கருத்தைப் புரிந்து கொண்டு உரைநடையாக மாற்றுங்கள்.
- நற்குணங்களைக் கூறும் கவிதைகளை நூலகத்திலிருந்து சேகரியுங்கள். கவிதை மலர் வெளியிடுங்கள்.

## நீதிக்கு உறவு இல்லை

புகார் நகரில் தனதத்தன் என்னும் பெயருடைய வணிகர் வாழ்ந்து வந்தார். புகார் நகர வீதியில் பெரிய கடை ஒன்றை அவர் நடத்தி வந்தார். பலவிதமான பண்டங்களை அவர் பலவிதமான வழிகளில் விற்றுப் பெரும் பொருள் ஈட்டினார்.

வணிகர் தனதத்தனுக்கு ஒரே மகன். மகனுக்குப் பூபதி என்று பெயரிட்டு, தனதத்தன் சீரோடும் சிறப்போடும் வளர்த்து வந்தார். பூபதி இளமையிலேயே கல்வியில் ஆர்வங்கொண்டு நன்றாகப் படித்து எல்லோரும் போற்ற தந்தை மனம் மகிழ எழிலோடு வளர்ந்து வந்தான்.

பூபதி வளர்ந்த பிறகு வியாபாரத்தில் நாட்டம் கொள்ளாமல் அரசுப் பணியில் சேர்ந்து உழைக்க விரும்பினான். அவன் விரும்பியபடியே அவனுக்கு அரசு வேலை கிடைத்தது. புகார் நகர நியாயமன்றத் தலைவருக்கு உதவியாளராகப் பூபதி நியமிக்கப்பட்டார்.

புகார் நகரில் அமைதி காப்பதும் ஒழுங்கை நிலை நாட்டுவதும் வணிகம் சீராக நடைபெறுகிறதா என்பதைக் கண்காணிப்பதும் நியாயமன்றத் தலைவருக்குரிய பல பொறுப்புகளில் சிலவாகும். நியாயமன்றத்தலைவர், நகரில் நடைபெறுகின்ற வணிகத்தைக் கண்காணிக்கும் பொறுப்பைப் பூபதியிடம் ஒப்படைத்தார்.

வியாபாரிகள் தாங்கள் விற்கின்ற பண்டங்களில் கலப்படம் செய்கிறார்களா? இல்லையா? என்பதையும் பண்டங்கள் நியாயமான விலையிலும் தரம் குறையாமலும் விற்கப்படுகின்றனவா என்பதையும் அளத்தல், நிறுத்தல் போன்றவை தவறில்லாமல் நடைபெறுகின்றனவா என்பதையும் கண்டறியும் பொறுப்பான பணியில் பூபதி சிறப்பாகச் செயல்பட்டு எல்லாருடைய பாராட்டுதலையும் பெற்று வந்தார்.



ஒருநாள் பூபதி ஒரு குதிரை மீது ஏறிக் கொண்டு காவலர்கள் உடன் வர தன் தந்தை தனதத்தன் வியாபாரம் செய்து வந்த கடை வீதிக்கு வந்தார். பூபதி வருவதைக் கண்ட சில வியாபாரிகள் அதுவரை தாங்கள் உபயோகித்து வந்த தவறான எடைக்கற்களையும் தராசுகளையும் உள்ளே மறைத்துவிட்டு சரியான தராசுகளையும் எடைக் கற்களையும் கொண்டு வியாபாரம் செய்தனர்.

தனதத்தன் கடைக்கும் சிலர் ஓடி வந்து, "ஐயா! உங்கள் மகன் கடை கடையாகச் சோதனை செய்து கொண்டு வருகிறார். உங்கள் கடைக்கும் வருவார் போல இருக்கிறது. நீங்கள் எதற்கும் தயாராக இருங்கள்" என்று தனதத்தனை எச்சரித்தனர்.

ஆனால் தனதத்தன். "நான் ஏன் பயப்பட வேண்டும்? பூபதி என் மகனல்லவா? எந்த மகனாவது எப்பொழுதாவது தன் தந்தையின் கடையைச் சோதனை செய்ய வந்ததாகக் கேள்விப்பட்டதுண்டா?" என்று அலட்சியமாகப் பதில் கூறினார்.

ஒவ்வொரு கடையாகச் சோதனையிட்டுக் கொண்டு வந்த பூபதி தந்தையிடம் "உங்கள் கடையைச் சோதனையிட அனுமதிக்க வேண்டும்" என்று கூறினார்.

தனதத்தன் பதில் ஏதும் கூறாமல் புன்னகை புரிந்த வண்ணம் நின்று கொண்டிருந்தார்.

பூபதி உடனே தன்னுடன் வந்த காவலர்களைப் பார்த்து, "ஏன் நிற்கிறீர்கள்? கடைக்கு உள்ளே சென்று சோதனை இடுங்கள். எடைக் கற்களையும் தராசையும் வெளியே கொண்டு வாருங்கள்" என்று ஆணையிட்டார்.

தனதத்தனுடைய கடைத் தராசும் எடைக்கற்களும் நல்ல நிலையில் உள்ள தராசோடும் எடைக்கற்களோடும் ஒப்பிட்டுப் பார்த்தனர். தனதத்தன் உபயோகித்த தராசும் எடைக்கற்களும் தவறாக இருப்பது தெரிய வந்தது.

கூடியிருந்தவர்கள் வியப்பு மேலிட வேடிக்கை பார்த்தனர். பூபதி என்ன செய்வாரோ? என்ன தீர்ப்பு வழங்குவாரோ? என்று கூட்டம் ஆவல் மேலிடக் காத்திருந்தது.

பூபதி தன் தந்தையைப் பார்த்து, "ஐயா உங்கள் கடைத் தராசும் எடைக் கற்களும் தவறானவை. இதற்கு என்ன தண்டனை தெரியுமா?" என்று கூறி நிறுத்தினார்.

எதிரே நிற்பது தன் மகன் என்பதை மறந்து, ஓர் அதிகாரி என்பதை உணர்ந்த தனதத்தன் செய்வதறியாது கலங்கி நின்றார்.



"ஐயா! நீங்கள் செய்யும் வியாபாரம் நம் நகருக்கே இழுக்கை ஏற்படுத்துகிறது. பல நாட்டவர் வந்து செல்லும் நம் நகரில் இப்படி வியாபாரம் நடந்தால் நம் நாட்டைப் பற்றி உயர்வான எண்ணம் எப்படி வெளிநாடுகளில் ஏற்படும்? எனவே நம் நகரின் பெருமையைக் காக்க உங்களுக்குத் தண்டனை விதிக்கிறேன். நீங்கள் அரசாங்கத்திற்கு ஐம்பது வராகன்கள் தண்டம் செலுத்த வேண்டும். அதுதவிர ஐந்து நாள் சிறைத்தண்டனையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும்" என்று பூபதி தெளிவான குரலில் உறுதியாகத் தண்டனையை அறிவித்தார்.

பூபதியின் அறிவிப்பைக் கேட்ட கூட்டத்தினர் அனைவரும் மிக்க வியப்பு எய்தினர்; சிலர் கைதட்டிப் பாராட்டுத் தெரிவித்தனர்.

பூபதி தன் தந்தையின் அருகில் சென்று "தந்தையே ! நீங்கள் என்னை மன்னித்து விடுங்கள். நீதிக்கு உறவு கிடையாது. தாயென்றும் தந்தையென்றும் உடன் பிறப்பென்றும் சட்டம் பாகுபாடு செய்வது கிடையாது. சட்டத்தின் முன்பு அனைவரும் சமம். நாட்டிற்காகவும் தெய்வத்திற்காகவும் நீதிக்காகவும் சட்டத்திற்காகவும் ஆற்ற வேண்டிய கடமையைத்தான் நான் நிறைவேற்றினேன்" என்று கூறினான்.

தனதத்தன் தன் மகனை இறுக அணைத்துக் கொண்டு கண்ணீர் வழிய நின்றார்.

பூபதி தந்தையைப் பார்த்து, "தந்தையே! ஏன் அழுகிறீர்கள்? உங்களுடைய தவறான செய்கைக்கு நான் இல்லாவிட்டாலும் வேறு யாராவது தண்டனை கொடுத்துத்தான் இருப்பார்கள்" என்று கூறினான்.

தனதத்தன் தன் மகனைப் பார்த்து "மகனே, பூபதி! உன்னைப் போன்ற நீதி தவறாத ஒரு பிள்ளையைப் பெற நான் என்ன தவம் செய்திருக்க வேண்டும்? உன் செயலைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன். என் தண்டனை எனக்கு மட்டும் அன்று. இந்த உலகத்திற்கே ஒரு பாடமாக இருக்கட்டும்" என்று கூறி விடைபெற்று சிறைக்கூடம் நோக்கிச் சென்றார்.

கூடியிருந்தோர் அனைவரும் பூபதியை வாயாரப் புகழ்ந்தனர். பூபதியின் நியாயம் தவறாத செயல் சோழ மன்னர் செவிக்கும் எட்டியது. மன்னர் பூபதியைப் பாராட்டி நியாயமன்றத் தலைவராகப் பதவி உயர்வு அளித்துச் சிறப்பித்தார்.

– அருணா. நடராசன்

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துப் பத்தியை முழுமை செய்யுங்கள்.

  புகார் நகரில், அமைதி காப்பதும் ஒழுங்கை நிலைநாட்டுவதும் வணிகம் சீராக நடைபெறுகிறதா ........
- கடமை தவறாத தன் மகனைக் கண்டு தனதத்தன் கூறியவற்றைப் பாடப்பகுதியிலிருந்து கண்டறிந்து எழுதுங்கள்.
- பிரித்து எழுதுங்கள்.
  - ஆர்வங்கொண்டு
  - தவறில்லாமல்
  - ஆணையிட்டார்
  - சிறைத்தண்டனை
  - எடைக்கற்கள்
- கடமை உணர்வு தவறாத பூபதியைப் பாராட்டி ஒரு பாராட்டுக் கடிதம் எழுதுங்கள்.
- கதைப்பகுதியை நாடகமாக மாற்றி வகுப்பில் நடித்துக் காட்டுங்கள்.

# நடுவுநிலைமை



## சமநீதி

சுவர்மீது அந்த ஏணி சாத்தப்பட்டு இருந்தது.

ஏணியின் குறுக்குச் சட்டங்கள் ஒன்றுக்குமேல் ஒன்றாகப் படிக்கட்டு போல அமைந்திருந்தன.

வீட்டுக்கு உள்ளேயிருந்து நான்கு சிறுவர்கள் ஒருவரை ஒருவர் துரத்திக் கொண்டு சிரித்தபடி வெளியே ஓடி வந்தார்கள்.

முதலில் ஓடி வந்த முத்து ஏணியைப் பார்த்ததும் அதன்மீது தாவி ஏறி உயரமான ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு மற்றவர்களைப் பார்த்துச் சிரித்தான்.

அடுத்து வந்தான் மாணிக்கம். அவனும் ஏணி மீது பாய்ந்து ஏறி முத்துவுக்குக் கீழே அமர்ந்து கொண்டான்.

மாணிக்கத்தைத் தொடர்ந்து, தங்கமும் அவனை அடுத்து வைரமும் ஓடிவந்து ஏணியில் ஏறினார்கள்.

இப்போது மேலே முத்துவும் அவனுக்குக் கீழாக மாணிக்கமும் அடுத்து தங்கமும் கடைசியாக வைரமும் ஏணிப்படிகளில் அமர்ந்திருந்தார்கள்.

முத்துவின் கால்கள் மாணிக்கத்தின் தோள்மீது அழுத்திக் கொண்டு இருந்தன.

மாணிக்கத்தின் கால்கள் தங்கத்தின் தோள்மீது அழுத்திக் கொண்டிருந்தன.

இப்படியே தங்கத்தின் கால்கள் வைரத்தின் தோள்களை மிதித்துக் கொண்டு இருந்தன.

எல்லாருக்கும் கீழாக வைரமும் எல்லாருக்கும் மேலாக முத்துவும் அமர்ந்திருந்தார்கள்.

முத்து சொன்னான்.

"நான் தான் உயரத்தில் முதலிடத்தில் இருக்கிறேன்! நீங்கள் எல்லாரும் எனக்குக் கீழே தான்! மூவரையும்விட நான் தான் உயர்ந்தவன்".

மாணிக்கம் சொன்னான்.

"நான் இரண்டாவது இடத்தில் இருக்கிறேன். எனக்குக் கீழே இரண்டு பேர் இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் எனக்குக் கீழேதான்! இருவரையும் விட நான்தான் உயர்ந்தவன்!"

தங்கம் சொன்னான்.

"நான் மூன்றாம் இடத்தில் இருக்கிறேன். எனக்குக் கீழே ஒருவன் இருக்கிறான். அவன் எனக்குக் கீழே தான். அவனை விட நான்தான் உயர்ந்தவன்."

வைரம் சொன்னான்.

"எல்லாருக்கும் கீழே கடைசியாக நான் இருக்கிறேன். எனக்குக் கீழே யாருமில்லை! எல்லாரும் என்னை விட உயர்ந்தவர்களாக இருக்கிறார்கள். நானோ தாழ்ந்தவனாக இருக்கிறேன்" என்று பரிதாபமாகச் சொன்னான்.

மேலே இருந்த முத்து, மாணிக்கத்தைத் தன் கால்களால் உதைத்துக் கொண்டிருந்தான். ஆனால், அதைப் பற்றிக் கவலைப்படாத மாணிக்கம் தான் உதைப்பதற்குத் தனக்குக் கீழே ஒருவன் இருக்கிறான் என்று மகிழ்ச்சி அடைந்தான்.

அப்படியே தங்கம், தன்னை உதைக்கும் மாணிக்கத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. தான் உதைப்பதற்குத் தனக்குக் கீழே வைரம் இருக்கிறான் என்று மகிழ்ச்சி அடைந்தான்.

எல்லாருக்கும் கீழே அமர்ந்திருந்த வைரம், "அடப் பாவிகளா! எல்லாரும் என்னை மிதித்துக் கொண்டு இருக்கிறீர்களே!" என்று கத்தினான்.

எல்லாருக்கும் மேலே அமர்ந்திருந்த முத்துவோ மற்ற எல்லாரையும் மிதித்துக் கொண்டிருக்கும் கர்வத்தில் பரிகாசமாகச் சிரித்துக் கொண்டிருந்தான்.



சத்தம்கேட்டு உள்ளே இருந்து அவர்களின் அப்பா ஓடி வந்தார்.

ஏணியில் ஒருவர் மீது ஒருவராக அமர்ந்திருக்கும் பிள்ளைகளைப் பார்த்தார்.

"இப்போது கீழே அமர்ந்து உள்ளவர்கள் மேலேயும் மேலே உள்ளவர்கள் கீழேயும் வாருங்கள். அது தான் நீதி!" என்று கூறினார் அப்பா.

வீட்டிற்கு உள்ளேயிருந்து வந்த அம்மா சொன்னார்.

### நடுவுநிலைமை

தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

''யாரும் உயரத்திலும் இருக்க வேண்டாம். யாரும் யாரையும் மிதிக்கவும் வேண்டாம். ஒருவர் மட்டும் சுகப்படவும் வேண்டாம். எல்லாரும் கீழே இறங்குங்கள்! சமமான புல் தரையில் சரிசமமாக உட்காருங்கள்! அதுதான் நீதி!" என்றார்.

நான்கு பிள்ளைகளும் கீழே இறங்கி வந்தார்கள். புல்தரையில் சமமாக அருகருகே அமர்ந்தார்கள். ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

'இந்தச் சமநிலை நம் சமுதாயத்தில் ஏற்பட வேண்டும். அதுவே சமநீதி.

– தமிழிறைவன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் கவிதை, கதை, கட்டுரை எனப் பல தளங்களில் தம் முத்திரையைப் பதித்துள்ளார். இவருடைய படைப்புகளில் நாணைய மனிதர்கள், தண்ணீர்ப் புதையல், தாத்தா சைக்கிள், இன்று குழந்தைகள் நீங்கள், பருவப் பூக்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

### உவமையணி

ஒருவர் தம்மை மேலும் அழகுபடுத்தப் பயன்படுத்துபவை அணிகலன்கள். அதுபோல் இலக்கியப் படைப்புகளை, குறிப்பாகப் பாடல்களுக்கு அழகூட்டக் கையாள்பவை அணிகள். தமிழில் பல்வேறு அணிகள் உள்ளன. அவற்றுள் முக்கியமானதும், பரவலாகப் பயன்படுத்துவதுமான அணி உவமையணி.

தாம் சொல்ல நினைத்த ஒரு பொருளை, பிறருக்கு நன்கு தெரிந்த இன்னொரு பொருளைச் சொல்லி விளங்க வைப்பது உவமையணி எனப்படும். ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டுக் கூறுதல் என்றும் பொருள் கொள்ளலாம். பண்பு, பயன், தொழில் என்னும் மூன்று நிலைகளில் உவமைகள் அமையும்.

1. 'கயல் மீன் போன்ற கண்ணுடையாள்'

   கயல்மீன் நீண்டு அழகாக இருக்கும். அவளுடைய கண்ணும் கயல்மீன் வடிவத்துடன் அழகாக உள்ளது. இங்கு மீனின் வடிவம் என்னும் பண்பை ஒப்புமைப்படுத்துவதால் இது பண்புவமை.

2. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
   கற்றனைத் தூறும் அறிவு.

   மணற்கேணியைத் தோண்டத் தோண்ட நீர் அதிகமாக ஊறிவரும். அதுபோல் நூல்களை வாசிக்க வாசிக்க அறிவு பெருகும். இங்கு மணற்கேணியைத் தோண்டுவதால் கிடைக்கும் பயன், நூல்களை வாசிப்பதால் கிடைக்கும் பயனுடன் ஒப்பிடப்படுகிறது. எனவே இது பயனுவமை.

3. 'குரங்கு போன்று தாவுகின்ற மனம்'

   இங்குக் குரங்கின் தாவுகின்ற தொழில் அடிக்கடி மாறும் மனத்துக்கு உவமை காட்டப்பட்டது. இதனால் இது தொழிலுவமை வகையைச் சார்ந்தது.

உவமையணியில் மூன்று கூறுகள் அமைந்திருக்கும். அவையாவன உவமானம், உவமேயம், உவமை உருபு என்பன.

எதை உவமையாகக் காட்டுகிறோமோ அது 'உவமானம்'. நாம் சொல்ல நினைத்த பொருள் எதுவோ அது 'உவமேயம்'. இரண்டையும் இணைப்பது 'உவமை உருபு' எனப்படும்.

'தாமரை போன்ற முகம்'

இங்குத் தாமரை – உவமானம், முகம் – உவமேயம், போன்ற – உவமை உருபு.

சில இடங்களில் உவமை உருபு வெளிப்படையாக இல்லாமல் மறைந்து நிற்கும். அதாவது தொக்கி நிற்கும். அவ்வாறு வருவதை உவமைத் தொகை என்போம்.

எ.கா – அன்ன நடை

இதன் பொருள் அன்னம் போன்ற நடையை உடையவர் என்பதாகும். இங்குப் 'போன்ற' என்னும் உருபு மறைந்து நிற்பதால் 'அன்னநடை' உவமைத் தொகை ஆயிற்று.

## செயல்பாடுகள்

- கதைப்பகுதியை வாசித்துக் கதையோடு தொடர்புடைய பொருள் தரக்கூடிய குறளைக் கண்டறியுங்கள்.
- முத்து, மாணிக்கம், தங்கம், வைரம் ஆகியோர் கூறியதை உரையாடல் வடிவில் எழுதுங்கள்.
- பாடப்பகுதியில் உவமையணி இடம்பெற்றுள்ள திருக்குறளைக் கண்டுபிடியுங்கள்.

## அரிஸ்டாட்டில் நாட்குறிப்பு

கி.பி. 2200 திருநெல்வேலியில்.

ஒரு நாள் திருநெல்வேலிக்கு விருந்தாளியாக வந்தேன். நான் தமிழ் நண்பர் கம்பர் வீட்டில் தங்கியிருக்கிறேன். என் நண்பன் காலை ஐந்து மணிக்கு என்னை எழுப்பினார். பிறகு நான் பல் துலக்கினேன். நான் நீராகாரம் குடித்தேன். கம்பர் என்னை ஊர் சுற்றி வர அழைத்துச் சென்றார். நான் வெளியே சென்றபோது ஒரு சுவர் ஓவியத்தைப் பார்த்தேன்.அதில் "ஒவ்வொருவரும் நேர்மையுடன் இருக்க வேண்டும்" என்ற அரசாங்கத்தின் விதிகளைப் பார்த்தேன்.



பின்னர் நான் சிறைச்சாலை நூலகத்திற்குச் சென்றேன். அதாவது சிறைச்சாலை நூலகமாக மாற்றப்பட்டது. ஏனெனில் இந்த ஊரில் குற்றங்கள் எதுவும் இல்லை. காரணம் அரசு சொன்னது போல் அனைவரும் விதிகளைப் பின்பற்றினர். அங்கு நான் பல புத்தகங்களைப் படித்தேன். நேரம் கிட்டத்தட்ட பதினொன்றாகிவிட்டது.

குழந்தைகள் கதைகள் பற்றி நிறைய புத்தகங்கள் இருந்தன. பிறகு நாங்கள் பொருநை ஆற்றுக்குச் சென்றோம்.

திருநெல்வேலி மக்கள் நதியைத் தங்கள் குழந்தையாகப் பராமரிக்கிறார்கள். நதி மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் இருந்தது. பலர் அங்குக் குளித்தனர். பொருநைக்கு நேர் எதிரே ஒரு பெரிய கட்டடம் இருந்தது. அதற்கு நான்கு வாயில்கள் இருந்தன. ஒரு வாயில் கோவிலுக்குச் செல்கிறது . ஒரு வாயில் தேவாலயத்திற்கு வழிவகுக்கிறது. ஒரு வாயில் மசூதிக்குச் செல்கிறது. கடைசி வாயில் நூலகத்திற்குச் செல்கிறது. ஒரே ஒரு கோவில், தேவாலயம், மசூதி இருந்தது.

மற்ற கோவில்கள் அனைத்தையும் பூங்காவாகவும் நூலகங்களாகவும் மாற்றிவிட்டனர். தொழிற்சாலை எதுவும் இல்லை. பலர் விவசாயம் செய்து வந்தனர்.

ஒவ்வொருவரும் பாரம்பரிய உடை அணிந்து, பாரம்பரிய உணவை உண்கின்றனர்.

பெண்கள், திருநங்கைகள் மற்றும் ஆண்களுக்கு இடையே எந்தப் பாகுபாடும் இல்லை. அனைவரும் எல்லா வகையான வேலைகளையும் செய்கிறார்கள். "இந்த ஊரில் பிச்சை எடுப்பவர்கள் உண்டா"? என்று என் நண்பரிடம் கேட்டேன்.."இல்லை என்று சொன்னார்.

"கடந்த நூறு வருடங்களாக இந்த ஊரில் ஒரு பிச்சைக்காரனையும் நாங்கள் பார்த்ததில்லை. இங்கே எல்லோரும் கல்வி கற்றவர்கள்; உழைப்பைக் கற்றவர்கள்" என்றார்.

அவர் என்னை அருங்காட்சியகத்திற்கு அழைத்துச் சென்றார். ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த கோடாரிகள், விதைகள், பானைகள் அனைத்தையும் வைத்திருந்தனர்.

சிறப்பு விருந்தினர் வருகை தாமதமாகும் என அருங்காட்சியகத்தில் ஒலிப்பெருக்கி மூலம் அறிவிப்பு வெளியானது.

தாமதத்திற்கான காரணத்தைக் கேட்டேன். பைபாஸ் சாலையில் சில வண்ணத்துப்பூச்சிகள் பறப்பதாக அருங்காட்சியக ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.



வண்ணத்துப்பூச்சிகளுக்கு இடையூறு ஏற்படாமல் இருக்க, கடந்த ஒரு மணி நேரமாக அனைத்து வாகனங்களும் சாலையில் நிறுத்தப்பட்டுள்ளன என்று ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

அது ஒரு பசுமையான உலகமாக இருந்தது. அன்பு, அறம், நேர்மை எங்கும் சூழ்ந்திருந்தது. அது ஒரு சொர்க்கம் போல் இருந்தது.சில மணி நேரங்களுக்குப் பிறகு சிறப்பு விருந்தினர் அருண்மொழி விழாவைத் தொடங்கி வைப்பதற்காக அருங்காட்சியகத்திற்கு வந்தார். நெறிமுறையின்படி, ரிப்பன் வெட்டுவதற்கு மூத்த ஆசிரியருக்கு அதிகாரம் அளித்தார்.

என்ன நடக்கிறது என்று என் நண்பரிடம் கேட்டேன்.

கடந்த நூறு ஆண்டுகளாக நாங்கள் புதிய நெறிமுறையைப் பின்பற்றுகிறோம். ஆசிரியர்கள் மற்றும் எழுத்தாளர்கள் எங்கள் நாட்டில் பிரபலமானவர்கள். அவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்று அவர் என்னிடம் கூறினார்.

– சூடாமணி

**ஆசிரியர் குறிப்பு** இவர் பத்தாவது வயதிலேயே சிறுகதைகளை எழுதத் தொடங்கியவர். சிறுகதைகள், கவிதைகள், தமிழர் பெருமைகள் பற்றிய காணொளிகள், வண்ண வண்ண ஓவியங்கள் எனத் தனது படைப்பாற்றலைப் பல தளங்களில் அற்புதமாக வெளிப்படுத்தியுள்ளார். தேசிய ஓவிய விருது, பாரதி பைந்தமிழ் சுடர் விருது, வாஜூரா உலக சாதனை விருது எனப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். இவரது முதல் படைப்பு "அம்மாவைத் தேடி" என்னும் தலைப்பில் அமைந்த கதைத்தொகுப்பாகும்.

## செயல்பாடுகள்

- கீழ்க்காணும் சுயவிபரக் குறிப்பைப் போன்று உங்களது சுயவிபரக் குறிப்பை எழுதுங்கள்.
    - பெயர் – கலைவேந்தன்
    - வயது – 12
    - பள்ளியின் பெயர் – அரசு உயர்நிலைப் பள்ளி, சாலை
    - வகுப்பு – 6
    - தந்தை பெயர் – தமிழ்மாறன்
    - தாயார் பெயர் – தேன்மொழி
    - பிடித்த உணவு – தோசை
    - பிடித்த விளையாட்டு – கபடி
    - பிடித்த எழுத்தாளர் – அழ. வள்ளியப்பா
    - பிடித்த நிறம் – பச்சை
    - பிடித்த பழம் – மாம்பழம்
- இந்தப் பாடப்பகுதியில் உங்களுக்குப் பிடித்த நிகழ்வு எது? ஏன்? காரணத்தை எழுதுங்கள்.

- அகர முதலியைப் பார்த்துப் பொருள் கண்டறியுங்கள்.
  - அருங்காட்சியகம்
  - அறம்
  - இடையூறு
  - நெறிமுறை
  - ஒருங்கிணைப்பாளர்
- இன்று உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை நினைவில் கொண்டு நாட்குறிப்பாக எழுதுங்கள்.

## "எம்மதமும் சம்மதமே"



இடம் : ராமசாமி வீடு.

(ரகீம் கையில் பையுடன் வருகிறான்)

லட்சுமி : யாரு ரகீமா? வாப்பா வா.. என்னப்பா என்ன விசேசம்?

ரகீம் : ஆன்டி! இன்னிக்கி ரம்சான் பண்டிகையில்ல..

லட்சுமி : அடடே.... மறந்தே போயிட்டேன். வாழ்த்துகள்.

ரகீம் : தேங்ஸ் ஆன்டி... அம்மா இதக் குடுத்துட்டு வரச்சொன்னாங்க.

லட்சுமி : என்னது... பிரியாணியா?

ரகீம் : ஆமாம் ஆன்டி...

லட்சுமி : என்னப்பாயிது... இன்னிக்கி செவ்வாக்கிழமை. நாங்க யாரும் இன்னிக்கி அசைவம் சாப்புட மாட்டோமே... நீ என்ன பண்ற....

ராமசாமி : (வந்துகொண்டே) லட்சுமி...நீ சாப்பிடலேனா நா சாப்பிடமாட்டேனா... இல்ல நம்ம புள்ளங்கத்தான் சாப்பிடாதா?

லட்சுமி : என்னங்க சொல்றீங்க?

ராமசாமி : எப்படா ரம்சான் வரும்... ரகீம் வூட்டு பிரியாணிய ஒரு புடி புடிக்கலாம்னு நா நாக்கைத் தொங்கப் போட்டுக்கிட்டு இருக்கேன். நீ காரியத்தையே கெடுத்துடுவ போலயிருக்கே. பைய குடுப்பா... லட்சுமி இத உள்ளே எடுத்து வச்சிட்டு, ரகீமுக்கு ஏதாவது குடிக்கக் கொண்டுவா...

ரகீம் : இருக்கட்டும் அங்கிள்... இப்ப நா ஜேம்ஸ் அங்கிள் வீட்டுக்குப் போய்க்கிட்டு இருக்கேன். அவுங்க வெளியே கிளம்பறதுக்கு முன்னாடி நா அங்க போகணும். வரேன் அங்கிள். வரேன் ஆன்டி.

(ரகீம் போகிறான்)

லட்சுமி : என்னங்க நீங்க இப்படிச் சொல்லிட்டீங்க?

ராமசாமி : தப்பா ஏதும் சொல்லிட்டேனா?

லட்சுமி : இன்னிக்கி நம்ப வீட்டில விரதம்னு ஒங்களுக்குத் தெரியாதா?

ராமசாமி : அது ரகீமுக்குத் தெரியாதே...

லட்சுமி : அதனாலத்தான் நம்ம சாப்பிடமுடியாதத ரகீம்கிட்டயே குடுத்திரலாம்னு நெனைச்சேன்.

ராமசாமி : லட்சுமி! இது சாப்பிடுறது சம்பந்தமான விசயம்னா நினைக்கிற?

லட்சுமி : பின்ன.

ராமசாமி : ரகீம் நம்ம வீட்டில பிரியாணி குடுத்துட்டு இப்ப ஜேம்ஸ் வீட்டுக்குப் போறான். அவன் குடுத்துட்டுப் போறது பிரியாணி மட்டுமில்ல. மதங்கள்த் தாண்டி நம்ம குடும்பங்களுக்கிடையே உள்ள உறவுகளோட அடையாளம். ஒவ்வொரு தீபாவளிக்கும் நாம பலகாரம் குடுத்து வுடுறோம். ஜேம்ஸ் கிறிஸ்துமஸ்சுக்குக் கேக் குடுத்து வுடுறாரு. இதெல்லாம் வெறும் குடுக்கல் வாங்கல்னு நினைக்கிறீயா? இல்லம்மா... ஒருத்தர் மேல ஒருத்தர் வச்சிருக்கிற அன்பின் வெளிப்பாடு. மதத்தையும் தாண்டி மனித மனங்களை இணைக்கிற பாலம். மதம் நம்மள பக்குவப்படுத்துது. மனித உணர்வுகள் அதை வெளிப்படுத்துது. அதுக்கு அடையாளம்தான் இந்தச் சின்னசின்ன பரிமாற்றங்கள்; பகிர்வுகள். அன்பின் அடையாளமா ரகீம் கொண்டு வந்த பிரியாணியைத் திருப்பி அனுப்பினோம்னா நாம நட்பா பழகறதுக்கு அர்த்தம் இல்லாம போயிடும்.

– திருச்சி ஜார்ஜ்

**ஆசிரியர் குறிப்பு** இவர் நூற்றுக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். இவரது "ரதிதேவி வந்தாள்" என்ற நகைச்சுவை நாடகம் இருநூறு முறைகளுக்கு மேல் மேடை ஏற்றப்பட்டு ரசிகர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றது. இவரது நாடகச் சேவையைப் பாராட்டி திருச்சி கலைக் காவேரி நுண்கலைக் கல்லூரி இவருக்கு நாடகத்திற்கான உயர் விருதினை வழங்கிக் கௌரவித்தது. இவரது நாடகங்கள் உண்மைத்தன்மையும் நகைச்சுவை உணர்வும் கொண்டவை.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியிலுள்ள பேச்சு வழக்குச் சொற்களைக் கண்டறிந்து அவற்றிற்கான தூய தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- "அனைவரும் சமம்" என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கைப் பொதுமக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு ஒரு சுவரொட்டி தயார் செய்யுங்கள்.
- பாடப்பகுதியை வகுப்பறையில் நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.

# கூட்டுறவு



## அவரவர் பங்கு

கையில் உள்ள ஐந்து விரல்களும் ஒற்றுமையாகத்தான் இருந்தன. ஆனால், ஒருவன் ஏதோ கோள் மூட்டிவிட்டு அந்த ஒற்றுமையைச் சீர்க்குலைத்து விட்டான்.



'நானா, நீயா?' என்ற கேள்வியும், 'நான்தான் பெரியவன் நீ சிறியவன்' என்ற ஆணவப் போக்கும் அந்த விரல்களுக்கிடையே தோன்றிச் சச்சரவு தொடங்கி விட்டது.

'என்னுடைய உதவி இல்லாமல், ஒரு தூசி, துரும்பைக் கூட உங்கள் நால்வரால் தூக்க முடியாது' என்று தனது தனித்தன்மையைச் செருக்குடன் கூறிக் கொண்டது கட்டை விரல்.



அடுத்த விரல் சும்மா இருக்குமா? 'எதிரே வருபவன் யார்? என்று உங்களால் கை நீட்டிக் காட்ட முடியுமா? எதிரில் வருபவனைக் கண்டு அவனைப் பற்றி எதுவும் தெரிவிக்காமல், குறியிட்டுக் காட்ட முடியாமல் நெட்டை மரங்களாக நிற்கும் உங்கள் நால்வரை விட நானே உயர்ந்தவன்' என்று வாதம் செய்தது 'ஆள் காட்டி' விரல்.

அடுத்து நின்று, இதைக் கேட்டுக் கொண்டிருந்த நடுவிரலுக்கு வந்ததே கோபம் பொத்துக் கொண்டு!.



"சுமை தூக்கறப்ப நான் தான் வேணும், ஆளைக் காட்டறப்போ நான் தான் வேணும்னு கித்தாப்புப் பேசறீங்களே, நாம எல்லோரும் வரிசையா நிற்போம். யாரு உசரம்னு பாத்துடலாமா? என்னைவிடக் குள்ளமா இருக்கிற உங்களுக்குத் துள்ளல் வேறயா? பேசாமப் போங்கடா "என்று கூறியது உயர்ந்த மனிதன் என்ற தோரணையோடு நடு விரல்.

நடுவிரலுக்குப் பக்கத்தில் இருந்த மோதிரவிரலின் முகம் சிவந்து காணப்பட்டது.



'தங்க மோதிரம் பரிசளிக்கப்பட்டாலோ, சொந்தமாகப் பண்ணினாலோ அதனை எவரும் வீட்டில் வைத்து அழகு பார்க்க மாட்டார்கள். அதனை எனக்குப் பூட்டி அழகு பார்ப்பார்கள். எனக்கு மோதிர விரல்னே பேரு. உங்க நாலு பேரிலும் நான் தான் வசதி படைத்தவன். நான் மோதிரம் போடலேன்னா, மோதிரம்னு ஒன்னு இருக்கிற விபரமே உங்களுக்குத் தெரியாது. சூரியனாட்டம் இருந்து, அதிலே உங்க முகத்தை வெளியிலே காட்ட வெக்கிறதே நான் தான்? சில்லரைக் காசுக்கு வழியில்லே. பெரிய கித்தாப்புக்கு மட்டும் கொறைச்சல் இல்லே' என்று மற்றவர்களை அடித்துத் தரைமட்டமாக்கியது மோதிரவிரல்.



பாவம், சுண்டு விரல் எல்லாரையும் விடக் குள்ளம் ஆனாலும் வீறாப்புடன் எழுந்து நின்றது.

"என்னடா, அவனவன் இல்லாததையும் பொல்லாததையும் பேசி ஏமாத்தப் பாக்கறீங்க. ஒருவன், இன்னொருவனிடம் சவால் விடணும்னா என்னோட பேரைச் சொல்லித்தான் 'அசைக்க முடியுமான்னு' கேட்பான். வீரத்தைக் காட்டற சோதனையிலே நான் தான்டா, முந்தி நிக்கறவன். உங்க பேரைச் சொல்லி, எவன்டா, இதுவரைக்கும் சபதம் போட்டிருக்கிறான் அல்லது சவால் விட்டிருக்கிறான்? அதுமட்டுமா? பெரிய மனிதர் பலரைப் பார்க்க நேரிடும்போது, அவர்களுக்கு மரியாதை செய்யும் வகையில் கைகூப்பி வணக்கம் தெரிவிக்கும் அந்த முதல் மரியாதைக்கான தெய்வீக காரியத்தில் முன்வரிசையில் நிற்பவன் நான்தான். உங்க கட்டை விரலும் நெட்டை விரலும் நடுவிரலும் அந்த நிகழ்ச்சியின்போது பின்வரிசையில்தான் நிற்பீர்கள் என்று சுடச்சுட விவாதம் செய்து அனைவரையும் வாயடைக்கச் செய்துவிட்டது சுண்டுவிரல்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த மூளை அடடா, கொஞ்சம் நேரம் அசந்தாப் போதுமே; நீங்க பாட்டுக்கு, பெருமை பீத்திக்க ஆரம்பிச்சுடுவீங்களே. அவங்கவங்க பங்குக்கு அவங்கவங்களுக்குப் பொறுப்பும் மரியாதையும் உண்டு. நெட்டையோ குட்டையோ, ஏழையோ, பணக்காரனோ, எல்லாரும் நான் சொல்றத கேளுங்க. இப்போதைக்கு உங்க ஆட்டம் பாட்டத்தை நிறுத்துங்க என்று உத்திரவிட்டது மூளை.



– எம்.ஏ.பழனியப்பன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் புகழ்பெற்ற எழுத்தாளரும் சமூக ஆர்வலருமாவார். இவருடைய படைப்புகள் சமூகச் சிந்தனைகளைத் தூண்டும் விதமாக அமைந்துள்ளன. பாலன் ஒரு தியாக வரலாறு, ஆசியாவின் பேரொளி, வாலிப நெஞ்சங்களில் வாழும் அப்துல்கலாம், மனிதர்கள், தித்திக்கும் தீந்தமிழ்க் கதைகள் போன்ற பல நூல்களைப் படைத்துள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.
    - விரல்களில் பெரியவன் யார்?
    - சுண்டு விரலின் முக்கியத்துவத்தைக் கேட்டறிந்து எழுதுங்கள்.
    - சண்டையை விலக்கியது யார்?
    - நமது உடலில் உறுப்புகள் இயங்குவதற்குக் கட்டளையிடும் உறுப்பு எது?
- கையில் விரல்கள் இல்லாதவர்களை நீங்கள் பார்த்ததுண்டா? கலந்துரையாடுங்கள்.
- கையில் பெருவிரல் இல்லையெனில் என்ன நேரிடும்? குறிப்புகளின் அடிப்படையில் கதையை முழுமை செய்யுங்கள்.
    - அரசன் ஆப்பிள் வெட்டுதல் – பெருவிரல் காயமடைதல் – அரசர் வேட்டைக்குச் செல்லுதல் – மலை தெய்வங்களுக்குப் பலியிட மலைவாழ் மக்கள் தீர்மானித்தல் – விரல் இல்லாததால் தப்பித்தல் – அரசர் எல்லாம் நன்மைக்கே என்று ஆறுதல் கொள்ளுதல்.
- எதிர்ச்சொற்கள் எழுதுங்கள்
    - பெரியவன்
    - கட்டை
    - கேள்வி
    - பெருமை
    - ஏழை
- உங்களது கை விரல்களின் படத்தை வரைந்து வண்ணம் தீட்டுங்கள்.

### கூட்டுறவால்

ஒற்றுமை வளரும் கூட்டுறவால் – வாழ்வில்
உயர்வு பெருகும் கூட்டுறவால்
அற்புத செயல்களெல் லாமின்று – நாமே
அவனியில் காண்போம் கூட்டுறவால்

ஆலைகள் ஆக்குவோம் கூட்டுறவால் – நல்
லறிவை வளர்ப்போம் கூட்டுறவால்
வேலை குறையும் கூட்டுறவால் – நம்மின்
விருப்பம் பெருகும் கூட்டுறவால்

பற்பல வேலை புதுமுறையில் – இப்
பாரினில் காண்போம் கூட்டுறவால்
நற்செயல் யாவும் நாட்டினிலே – நாம்
நாடி முடிப்போம் கூட்டுறவால்

உலகம் வளர்வது கூட்டுறவால் – போற்றும்
உண்மை வளர்வது கூட்டுறவால்
நலமே வளர்வது கூட்டுறவால் – நம்
நாடோ வளர்வது கூட்டுறவால்

– சமதர்மன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் 1951–ஆம் ஆண்டு நவம்பர் 11–ஆம் நாள் சென்னையில் பிறந்தார். இவருடைய கவிதைகள் சமதர்மத்தை அறிவுறுத்துகின்றன. 'நிறைமதி' என்ற இலக்கிய திங்கள் ஏட்டிற்கும் 'கவிப்புனல்' என்ற கவிதைத் திங்கள் ஏட்டிற்கும் ஆசிரியராக இருந்தவர்.

## செயல்பாடுகள்

- கவிதையில் இரண்டாம் எழுத்து ஒரே போல் வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- கூட்டுறவால் ஏற்படும் நன்மைகளைப் பாடலில் இருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்.
- அகர முதலியைப் பார்த்துப் பொருள் கண்டுபிடியுங்கள்.
  - கூட்டுறவு
  - அவனி
  - விருப்பம்
  - பார்
  - நற்செயல்
- ஒற்றுமையை வலியுறுத்தும் கதைகளை நூலகத்திலிருந்து சேகரித்துக் கதைமலர் வெளியிடுங்கள்.

## பூவெல்லாம் சேர்ந்தால்தான் மாலை ஆகும்!

ஒவ்வொரு கல்லாகச் சேர்த்து வைத்தால்தான் கட்டடம் ஆகும். பூவெல்லாம் சேர்த்துக் கோர்த்தால்தான் மாலை ஆகும். மரங்கள் எல்லாம் சேர்ந்து இருந்தால் தான் தோப்பாகும். எழுத்துகள் யாவும் சேர்ந்து இருந்தால்தான் புத்தகமாகும். நூல்கள் எல்லாம் சேர்ந்து இருந்தால்தான் நூலகமாகும். நூல் இழைகள் சேர்ந்தால் தான் துணியாகும். பவள முத்துகள் எல்லாம் சேர்ந்தால் தான் அணியக்கூடிய ஆரம் ஆகும்.



மனிதன் உணவு அருந்தும்போது ஐந்து விரல்களும் சேர்ந்துதான் செயல்படுகின்றன. ஒன்று கூடி வாழ்வது, ஒற்றுமையாக வாழ்வதுதான் வாழ்க்கைக்கு மிகச் சிறந்தது. நமது நாட்டில் காலம் காலமாக, தொன்று தொட்டு கிராமங்களில், திருவிழாக்கள், கல்யாணம், பொது நிகழ்ச்சிகள் இவை எல்லாவற்றிலும் மக்கள் கூட்டம் கூட்டமாக ஒன்று கூடி, ஒத்துழைப்புடனும் ஒற்றுமையுடனும் கொண்டாடி மகிழ்வதை நாம் யாவரும் கண்டிருக்கிறோம் அல்லவா?

'ஊரோடு ஒத்துவாழ்', 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' எனும் அறிவுரைகளை நாம் படித்திருக்கிறோம். நமது நாடு அநேக வேற்றுமைகளிலும் ஒற்றுமை கொண்டது. பல மாநிலங்கள், பல மொழிகள், உணவு, உடை எல்லாம் வேறுபட்டாலும், தேவைப்படும் சமயங்களில் ஒன்றுகூடி செயல்படுவார்கள்.

உலகம் ஒளிமயமாகத் திகழச் சேர்ந்து பாடுபட வேண்டும். பன்மையில் ஒருமை நிலவ ஒத்துழைக்க வேண்டும்.

உலகுடன் ஒத்து வாழ கற்க வேண்டியது மிக அவசியம். நமக்குள் இருக்கும் மனிதப் பண்பு என்ற ஈரக்கசிவை உலர்ந்து போகவிடாமல் காப்பதுதான் சாதனை.

"காக்கை குருவி எங்கள் சாதி

நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்

நோக்கும் திசையெல்லாம் நாமின்றி வேறில்லை" என்று பாரதியார் பாடி இருக்கிறார்.

திருக்குறளில் 'ஒப்புரவு' என்று சொல்லப்பட்டுள்ளது. இதன் பொருள் 'ஒப்பு' என்றால் சமத்துவம், உறவு என்றால் பலம். தனிப்பட்ட ஒரு தென்னை நாரை நாம் வெகு சுலபமாகக் கைகளினால் அறுத்துவிடலாம். அதுவே, பல நார்களைக் கொண்டு திரித்து ஒரு வடமானால் அது தேரையே இழுத்துவிடும் சக்தி உள்ளது.

'நான்' என்று சொல்வதில் யாதொரு அர்த்தமும் இல்லை. பிரயோஜனமும் இல்லை. 'நாம்' என்பதுதான் ஒற்றுமையைப் பிரதிபலிக்கிறது.

நமது முன்னோர்கள், மனித சமூகத்தில் சகோதரத்துவம், சமத்துவம் இருக்க வேண்டியது அவசியம் என்பதை அறிவுரைகள் மூலம் ஆங்காங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான தேனீக்கள் பூக்களிலிருந்து தேனை உறிஞ்சி, ஒற்றுமையாகத் தேன்கூடு கட்டிக் காப்பதை நாம் பார்த்திருக்கிறோம்.



நாம் சிறு வயதில் ஒரு கதை படித்திருக்கிறோம் அல்லவா? நான்கு பசுக்கள் ஒரு காட்டில் தினமும் ஒன்றாகச் சென்று புல் மேய்ந்து விட்டு சேர்ந்து இருப்பிடம் வந்து சேரும். இதைப் பார்த்துக் கொண்டிருந்த சிங்கத்திற்கு, அந்தப் பசுக்கள் சேர்ந்து இருந்ததால், அவற்றைத் தனக்கு இரையாக ஆக்கிக் கொள்ள முடியவில்லை.

ஒருநாள் அந்தப் பசுக்கள் ஒன்றையொன்று முட்டி, சண்டை போட்டுக் கொண்டு, தனித்தனியாகப் புல் மேய்ந்து கொண்டிருந்தன. சிங்கத்திற்கு இந்தச் சூழ்நிலை சௌகரியமாகப் போய்விட்டது. அன்று ஒரு பசுவைக் கொன்று, தனக்கு உணவாக்கிக் கொண்டது சிங்கம்.

கூடி வாழ்வதை, ஒத்துழைப்பதை, ஒற்றுமையாக இருப்பதைத்தான் இக்கதை வலியுறுத்துகிறது. குடும்ப ஒற்றுமை, நாட்டு ஒற்றுமை,சமுதாய ஒற்றுமை இவை யாவும் அன்பில் அடங்கியுள்ளது.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே, மனிதன் கூட்டுறவு, குழு ஆகியவற்றின் அடிப்படையில் தான் வாழத் தொடங்கினான். மனித குலம், மக்கள் சமுதாயம் இன்பமாக, வளமாக வாழ வேண்டும் என்றால், பரந்த மனப்பான்மையுடனும் பிறர் நலத்தைப் பேணியும் ஒற்றுமையுடன் வாழ்வதே மேல். ஒற்றுமையுடன் வாழ்ந்தால் ஒருவருக்கொருவர், அன்புடன் நேசிக்கும் பண்பு தோன்ற வாய்ப்பு இருக்கிறது.

மனித நேயம் என்ற ஒரே நோக்கத்துடன், எண்ணத்துடன், மனதுடன், பண்புடன், பேதமற்று, எல்லோரும் ஒன்று சேர்ந்து,ஒன்று கலந்து இருப்பதுதான் ஒற்றுமை. இதுதான் மனித சமூகத்தின் உயர்ந்த இலட்சியம்! மனித வாழ்வின் சிகரம்! ஊருடன் கூடி வாழ்வோம்!

– இரா. வைத்தியநாதன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் தஞ்சாவூர் மாவட்டம் திருக்கருகாவூரில் பிறந்தவர். பெற்றோர் ராமமூர்த்தி, குஞ்சம்மாள் தம்பதியினர். கடந்த ஐம்பது வருடங்களாக, தனியார் நிறுவனத்தில் பல முக்கியமான பதவிகளை வகித்து வருகிறார். சாஸ்த்ரீய சங்கீதத்தில் இவருக்கு மிக்க ஈடுபாடு உண்டு. சமூகச் சேவையிலும் ஊக்கமுடன் செயல்படுபவர்.

## செயல்பாடுகள்

- "ஊரோடு ஒத்து வாழ்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்ற சொற்பொழிவுக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- ஒற்றுமையைப் பற்றிப் பாரதியார் கூறுவனவற்றைப் பாடப்பகுதியிலிருந்து கண்டுபிடித்து எழுதுங்கள்.
- 2024, ஜூலை மாதம், வயநாட்டில் முண்டக்கை எனும் இடத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உங்கள் பள்ளியிலிருந்து உதவி செய்தீர்களல்லவா? இந்நிகழ்வைப் பத்திரிகைச் செய்தியாக வெளியிடுங்கள்.
- அகர முதலியைப் பயன்படுத்திப் பொருள் கண்டுபிடியுங்கள்.
  - மனிதநேயம்
  - பண்பு
  - சேவை
  - ஊழியர்
  - சமத்துவம்
- 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' இதுபோன்ற ஒற்றுமையை வலியுறுத்தும் பழமொழிகளைத் திரட்டி எழுதுங்கள்.
- பிரித்து எழுதுங்கள்.
  - திசையெல்லாம்
  - வேறில்லை
  - ஒன்றையொன்று
  - மனப்பான்மையுடன்
- பாடப்பகுதியில் வரும் அடுக்குத்தொடர்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

  எ.கா: காலம் காலமாக

அலகு 3

# அயராது உழை



ஒரு மனிதனின் பொருளாதாரத்தை நிர்ணயிப்பதில் தொழில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சிறுதொழில், கைத்தொழில், குடிசைத்தொழில் எனத் தொழில்கள் பலவகைப்படும். தொழில்கள் மனித வாழ்க்கையை முன்னேற்றவும், சமூகத்தில் மதிப்பைப் பெறவும் செய்கின்றன. ஆகவே, ஏட்டுக் கல்வியோடு சிறு சிறு தொழில்களையும் இளமைப் பருவத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டும்.

# உருமாறிய உலகத்தான்



## காகிதக் கூடை

குப்பை கூளக் காகிதம்
கூட்டிப் பெருக்கி அள்ளியே
வீட்டில் உள்ள அனைவரும்
வீணாய் அதனைக் கொட்டுவர்!

அள்ளிப் போட்ட காகிதம்
அதனை நீயும் சேர்த்துத்தான்
அழகுக்கூடை செய்யலாம்
அந்த முறையைச் சொல்லுவேன்!

அள்ளிவந்த தாள்களை
அழகாய் ஊற வைத்திடு !
அரைக்கும் முன்பு அதனுடன்
அளவாய் வெந்தயம் சேர்த்திடு!

இரண்டும் சேர்த்து உரலிலே
இட்டு நீயும் அரைத்திடு!
இருக்கும் குடத்தைக் கவிழ்த்துநீ
ஈரத்துணியைப் போட்டிடு!

அரைத்த அந்தக் கூழையே
  அளவாய் அதன்மேல் பூசிடு!
அதனை வெயிலில் காயவை
  அழுக்கில்லாமல் அகற்றிவை!

அந்தக் கூடை தன்னிலே
  அழகாய் வண்ணம் தீட்டிடு!
அம்மா சொல்லும் பொருள்களை
  அதிலே வாங்கி வந்திடு!

– முனைவர் ஆ. ஜீவானந்தம்

**ஆசிரியர் குறிப்பு** இவர் பல கவிதைகளையும் கதைகளையும் படைத்துள்ளார். தன்னுடைய கவிதைகளில் மாணவர்களுக்கான வாழ்க்கைப் பாடத்தை எளிய முறையில் எடுத்துக்காட்டும் திறமை பெற்றவர். இவர் சிறந்த சமூகச் செயல்பாட்டாளராகவும் திகழ்ந்து வருகிறார்.

## செயல்பாடுகள்

- கவிதையை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- பாடலில் முதல் எழுத்து ஒரேபோல் வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.
  - வீட்டிலுள்ள
  - அள்ளிவந்த
  - அழுக்கில்லாமல்
  - ஈரத்துணி
- பாடலை வாசித்துக் கருத்தைப் புரிந்துகொண்டு காகிதக்கூடை தயாரிக்கும் முறையைக் குறிப்பாக எழுதுங்கள்.

## ஒரு காகிதத்தின் கதை

கதாபாத்திரங்கள் : பாப்பு (பேப்பர்)
ராஜேஷ் (மாணவன்)
கறுப்பன் (கரும்பலகை)
மற்ற மாணவ மாணவிகள்
திருமதி கமலா (வகுப்பாசிரியை)
சிம்பு (சாக்கட்டி)

உடையலங்காரங்கள்:

1. பாப்பு –இந்த மாணவ நடிகனுக்கு உடலெங்கும் காகிதம் சுற்றவும் கண்ணில் காகிதக் கண்ணாடி.
2. கறுப்பன்– தலையிலிருந்து கால்வரை கறுப்பு நிற உடை அணிவித்து ஒரு மூலையில் நிற்க வைக்க வேண்டும்.

3. சிம்பு– தலையில் பலவித சாக்பீஸ்களைக் கோர்த்த கிரீடம் அணிவிக்கவும். இம்மாணவனைக் கறுப்பன் அருகில் நிற்க வைக்கவும்.

**காட்சி – 1**



இடம் : பள்ளி வகுப்பு, ராஜேஷ் நோட்டுப் புத்தகத்தில் உள்ள பேப்பர்களைக் கிழித்து எறிகிறான்.

பாப்பு : தம்பீ ராஜேஷ், தயவு செய்து என்னைக் கிழித்துப் போட்டுத் துன்புறுத்தாதே.

(ராஜேஷ் காதில் விழாததால் கிழித்துக் கொண்டே இருக்கிறான்)

கறுப்பன் : பாப்பு அண்ணே, இந்தச் சிறுவர்களிடம் எதுவும் கூறி பயனில்லை. அவர்கள் உங்களுடைய முக்கியத்துவத்தை உணரவில்லை. உங்களை நினைத்தால் வருத்தமாக உள்ளது.

பாப்பு : ஐயோ, என்னை இப்படிக் கிழிக்கிறானே. என்னால் முடிய வில்லை. (என்று கூறித் தொப்பென்று கீழே விழுந்துவிடுகிறான்)

கறுப்பன் : இந்த உலகத்தார் உங்களது முக்கியத்துவத்தை உணர்ந்தால் இப்படிச் செய்வார்களா?கடவுள் இவர்களுக்குச் சரியான தண்டனை தரவேண்டும்.

பாப்பு : தம்பீ கறுப்பா! மாணவ மணிகளைத் திட்டிவிடாதே. அவர்கள் அறியாச் சிறுவர்கள். பெரியோர்கள்தான் இவர்களுக்குக் கற்றுத் தரவேண்டும்.

(ராஜேஷ் காகிதங்களைக் கசக்கிப் போடுவது, கிழிப்பது போன்ற செயல்களைச் செய்து கொண்டே இருக்கிறான்)

**காட்சி – 2**

(வகுப்பாசிரியர் கமலா உள்ளே வருகிறார். கீழே கிடக்கும் காகிதக் குப்பைகளைக் கண்டு கோபம் கொள்கிறார்)

டீச்சர் : யார் இப்படிக் காகிதங்களைக் கிழித்துப் போட்டது?

மற்ற மாணவ மாணவிகள் : டீச்சர்! இந்த ராஜேஷ்தான் இவற்றையெல்லாம் செய்தான். நாங்கள் எவ்வளவோ கூறியும் அவன் கேட்கவில்லை.



டீச்சர் : ராஜேஷ் இங்கே வா. இவர்கள் கூறுவது உண்மையா?

ராஜேஷ் : (தலை குனிந்தபடி) ஆமாம் டீச்சர். நான்தான் கிழித்தேன்.

டீச்சர் : ராஜேஷ் இன்று நான் காகிதங்களைப் பற்றிப் பல விஷயங்களைக் கூறப்போகிறேன். இது நீ மட்டுமல்ல. இங்குள்ள அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். என்ன காகிதத்தின் கதையைப்பற்றிச் சொல்லட்டுமா?

மற்ற மாணவ மாணவிகள் : (கோரஸாக) சொல்லுங்க டீச்சர்.

டீச்சர் : காகிதம் என்பது மிக உயர்ந்த பொருளாகும். உலகிலேயே மிக அதிகமாக உபயோகிக்கப்படும் பொருள் தண்ணீர். அதற்கு அடுத்த இடம் காகிதத்திற்குத்தான். நாம் அறிவு சார்ந்த பல விஷயங்களைக் காகிதத்தில்தான் பதிவு செய்கிறோம். அதுதான் புத்தகங்கள்.

ராஜேஷ் : இல்லை டீச்சர். என் அப்பாவிடம் கம்ப்யூட்டர் உள்ளது. அதில் ஒரு ஃபிளாப்பியில் எல்லா விஷயங்களையும் என் அப்பா பதித்துக் கொள்கிறார்.

டீச்சர் : சரி ராஜேஷ். கணினி கெட்டுப் போகக் கூடும். அதுமட்டுமல்ல. கணினியில் இருந்து வெளியே எடுத்துப் படிக்க வேண்டும் என்றால் காகிதத்தில்தான் அச்சு எடுக்க இயலும்.

மற்ற மாணவ மாணவிகள் : டீச்சர் காகித்தின் கதையைச் சொல்லுங்கள்.

டீச்சர் : இதோ,ராஜேஷ் கிழித்து, கசக்கி எறிந்த இந்தக் காகிதத்தின் கதையைக் கூறட்டுமா? இதன் பெயர் பாப்பு என்று வைத்துக் கொள்ளலாம். பாப்பு ஏதோ மரத்தின் பட்டைகளிலிருந்து தயாராகி இங்கு வந்திருக்கிறான்.

மற்ற மாணவ மாணவிகள் : எந்த மரம் என்று தெரியவில்லையே? உலகிலுள்ள எந்த மரமாக இருக்கும்? (இப்படி மொண மொணக்கிறார்கள்)

டீச்சர் : இயற்கை வளங்களில் ஒன்றான மரம் நமக்கு அளிக்கும் காகிதம் ஓர் உயர்ந்தபொருள். இயற்கை நமக்களிக்கும் எதையும் கெடுப்பதற்கு நமக்கு உரிமை இல்லை. அதனால் காகிதங்களைத் தங்கத்தைவிட மேன்மையாக உபயோகிக்க வேண்டும்.

(மாணவர்கள் உன்னிப்பாக அனைத்தையும் கேட்கின்றனர்)

ராஜேஷ் : டீச்சர் காகிதங்களை எப்படிப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்?

டீச்சர் : முதலில் நம் நோட்டுப் புத்தகங்களுக்கு அட்டை போட்டு அழுக்குப் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் புத்தகங்களைக் கிழிக்கக்கூடாது. ஒரு பக்கத்தின் இரு புறத்திலும் எழுத வேண்டும். அது மட்டுமல்ல. உபயோகப்படுத்திய, நமக்குத் தேவையில்லாத காகிதங்களைப் பயன்படுத்திப் பொம்மைகள் செய்யலாம்.

ராஜேஷ் : பொம்மைகளா? எப்படிச் செய்வது டீச்சர்?

டீச்சர் : உபயோகப்படுத்திய காகிதங்களைச் சிறு துண்டுகளாக வெட்டித் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். பிறகு அவற்றை அரைத்து, ஒரு கிண்ணம், பூஞ்சாடி என்று நமக்குப் பிடித்தவற்றில் நன்றாகப் பூசி வெயிலில் காய வைக்க வேண்டும். காய்ந்த பின் அவற்றை லேசாகத் தட்டினால் நமக்குப் பிடித்த வடிவில் பேப்பர் கிண்ணங்கள் ரெடி. பிறகு உங்களுக்குப் பிடித்த வர்ணங்களைப் பூசி அழகு செய்யலாம். இவற்றைப் "பேப்பர் மேஷ்" என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.

மற்ற மாணவ மாணவிகள் : டீச்சர், டீச்சர் நாம் எப்பொழுது செய்யலாம்? எங்களுக்கு ஒரே ஆசையாக இருக்கிறது.

டீச்சர் : நாளைக்கு வகுப்பில் இதற்குரிய ஆசிரியரை அழைத்து உங்களுக்குக் கற்றுத் தருகிறேன். (மாணவர்கள்'ஓ' என்று ஆர்ப்பரித்துக் கொண்டு செல்கிறார்கள்)

கறுப்பன் : என்ன பாப்பு, உன் கவலை தீர்ந்ததா?

பாப்பு : அப்பாடா, இனி என்னை இந்த மாணவர்கள் துன்புறுத்த மாட்டார்கள்.

சிம்பு : பாப்பு அண்ணே! உங்க சந்தோஷத்துல என்னை மறந்து போயிடாதீங்க. மாணவர்களுக்கு என்னைப் பற்றியும் கூற வேண்டும் என்று டீச்சரிடம் சொல்லுங்கள்.

பாப்பு : (சிரித்துக் கொண்டே) கட்டாயமாகச் சொல்கிறேன். அடுத்த வகுப்பில் உன் பெருமையைப் பற்றிச் பேசச் சொல்கிறேன்.போதுமா?

(பாப்பு, சிம்பு,கறுப்பன் மூவரும் சிரிக்கிறார்கள்)

– காந்தலட்சுமி சந்திரமௌலி

**ஆசிரியர் குறிப்பு** இவர் சிறுவயதிலேயே கதைகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சிறுவர் இலக்கியம், நாவல்கள், குறு நாவல்கள், சிறுகதைகள் எனப் பல்வேறு களங்களில் தடம் பதித்துள்ளார். நந்தா தீபம், சிறுவர் இலக்கிய இரத்தினா, எழுத்துச்சுடர், அருள் வளர் நங்கை என்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியில் இடம் பெறும் கதாபாத்திரங்களின் பெயர்களை எழுதுங்கள்.
- பாடப்பகுதியை வகுப்பறையில் நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.
- பாடப்பகுதியை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.
  - தங்கத்தை விட மேன்மையாகப் பயன்படுத்த வேண்டிய பொருள் எது?
  - காகிதங்களை எப்படிப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் என்பதை எழுதுங்கள்?
- நம் அன்றாட வாழ்க்கையில் காகிதம் எவ்வாறெல்லாம் பயன்படுகிறது என்பதைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

## காகிதம் – தன் வரலாறு கூறுதல்

இன்று நான் இல்லாத இடமே இல்லை. கணினி என்ற கம்ப்யூட்டர் வந்த பின்னும், என்னுடைய பயன்பாடு குறையவில்லை.

ஆதி மனிதன் தன் சிந்தனைகளைப் பாறைகளில் ஓவியமாய்த் தீட்டினான். பிறகு களிமண்ணைப் பலகையாய்ச் செய்து எழுதினான். பின்னர் மரப்பட்டையில், இலையில் எழுதினான். தொடர்ந்து பனையோலையைப் பக்குவப்படுத்தி எழுதினான். ஆனால் எதுவும் எளிமையாக அமையவில்லை. என்ன செய்வது எனச் சிந்தித்தான்? சிந்தித்ததின் பயனாய்ச் சீனர்கள் என்னைக் கண்டுபிடித்தார்கள்.

கிறிஸ்துவுக்கு முன்னர் 1–ஆம் நூற்றாண்டில் சீனாவைச் சேர்ந்த சாய்லுன் என்பவர் என்னைப் (105AD) பேப்பரஸ் (Papares) என்ற தாவரத்திலிருந்து கண்டு பிடித்தார். என்னை அவர் எழுதுவதற்குப் பயன்படுத்தவே இல்லை. அரண்மனையில் அழகுப் பொருளாய்

இருந்தேன். பின்பு கி.பி. மூன்றாம் நூற்றாண்டில்தான் என்னை எழுதுவதற்காகப் பயன்படுத்தினார்கள்.

என் புதிய வடிவத்தைக் கண்டு பலர் ஆச்சரியப்பட்டார்கள். அப்போதும் நான் அரண்மனையில் மன்னனின் கைகளில்தான் இருந்தேன். என்னுடைய அதிசயத்தன்மையைக் கண்டவர்கள் மெல்ல என்னைச் சமர்கண்டிற்கும் பாக்தாத்திற்கும் கடத்தினார்கள்.

'பேப்பரஸ்' என்னும் தாவரத்திலிருந்து என்னைத் தயாரித்ததால் என்னைப் பேப்பர் என அழைத்தார்கள். தமிழில், நான் காகிதம் ஆனேன்.

என்னைப் பேபரஸ், சைபக்ஸஸ் பேபரஸ், மல்பெரி, பாஸ்ட் பைபர் முறையில் தயாரித்தார்கள். அக்காலங்களில் நான் கெட்டியாய், கடினமாய் கல்போல இருந்தேன். பிறகு என்னை மென்மையான வடிவத்திற்குக் கொண்டு வந்தார்கள்.

ஜெர்மனியில் ஜொஹன்னஸ் கூட்டன்பர்க் என்ற தச்சு வேலைக்காரன் இருந்தான். திறமைசாலி. அவன் கையில் நான் அகப்பட்டேன். கையால் எழுதுவது நிலைக்காது. எனவே, என்மீது அச்சிட்டால் காலம் காலமாய் நிலைத்திருப்பேன் என்ற எண்ணம் அவனுக்குள் ஏற்பட, அச்சு மை கண்டுபிடித்து, என் மீது கருப்பு எழுத்துகளால் பதித்தான். அவனின் அந்தச் செயலால், நான் உலகப்புகழ் பெற்றவனானேன்.

சற்று மங்கலான நிறத்தில் உருவான நான், இன்று ஆயிரக்கணக்கான நிறங்களில் உங்கள் கைகளில் தவழ்கிறேன்.

கல்வெட்டில் உள்ள பழங்கால எழுத்துகள், ஓலைகளில் எழுத்தாணிகள் கொண்டு எழுதப்பட்ட பல நூல்கள், என்னால் உயிர்பெற்றுப்



புத்தகங்களாய்த் திகழ்கிறேன். கல்விக் கூடங்களில் நான் முக்கியமாகப் பயன்படுகின்றேன்.

என்னுடைய தோற்றத்தையும் நான் அச்செழுத்து வடிவில் மாறிய பின்னர், எனக்கு ஏற்பட்ட மரியாதையையும், காலம் காலமாய் அனுபவித்து வருகிறேன். இன்னும் எத்தனை நூறாண்டுகள் ஆனாலும் நான் மறையவே மாட்டேன் என்று உறுதியாகக் கூறுகிறேன்.

– சிவரஞ்சன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் தமிழ் இலக்கியத்திற்குத் தன்னுடைய கதைகளாலும் கவிதைகளாலும் அணி செய்துள்ளார். பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும் விதத்தில் பல பொதுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கீழ்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.
  - காகிதம் எந்தத் தாவரத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது
  - காகிதத்தை முதன் முதலில் கண்டுபிடித்த நாடு எது?
  - பேப்பர் எனப் பெயர் வரக்காரணம் என்ன? அதன் சிறப்பை எழுதுங்கள்?
  - பழங்காலத்தில் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள் எது?
  - பனையோலைகளில் எதைக் கொண்டு எழுதினர்?
- பேனா தன்வரலாறு கூறுவதைப் பற்றிக் கலந்துரையாடி எழுதுங்கள்.
- பள்ளி பாலர்மன்றத்தில் உரையாற்றுவதற்காக அன்றாட வாழ்க்கையில் காகிதம் எனும் தலைப்பில் சொற்பொழிவுக் குறிப்பு எழுதுங்கள்.
- அதிகமான காகிதப் பயன்பாட்டால் நமது இயற்கை பல்வேறு வழிகளில் அழிகின்றது. இதைத் தடுக்கும் விதத்தில் காகிதத்தின் பயன்பாட்டைக் குறைக்க நீங்கள் கூறும் கருத்துகளை எழுதுங்கள்.

# முன்னேற்றும் கைகள்



## கைத்தொழில்

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் ;
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் :
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ?

உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் நடவாது:
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ?

நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்திடுவார்?
குயவர் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடத்திட வேண்டுமென்றும்?

கொல்லரும் தச்சரும் கூடாமல்
கூடமும் மாடமும் வீடாமோ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
காரியம் பலவினுக் கச்சாணி.

சலவை சவரம் செய்தாலும்
          சாக்கடை கழுவுதல் செய்தாலும்
உலகுக் கதனால் உபகாரம்
          ஒன்றும் தெரியார் வெறும்பாரம்

ஏழை செல்வன் என்றுவரும்
          எல்லாப் பிணக்கும் நின்றுவிடும்;
வாழிய வாழிய கைத்தொழில்கள்
          வாழி நித்திய சாத்தியமும்.

– நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

**ஆசிரியர் குறிப்பு** இவர் நாமக்கல் மாவட்டம் மோகனூரில் வேங்கடராமன் பிள்ளை, அம்மணியம்மாள் தம்பதியர்களுக்கு மகனாக 1888 அக்டோபர் 19–ஆம் தேதி பிறந்தார். இவரது இயற்பெயர் வெ. இராமலிங்கம். இவர் ஒரு சிறந்த கவிஞராகவும் எழுத்தாளராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் சமூகச் சீர்திருத்தவாதியாகவும் விடுதலை வீரராகவும் விளங்கினார். மலைக்கள்ளன், மாமன் மகள், மரகதவல்லி போன்றவை இவரது குறிப்பிடத்தக்க நூல்கள் ஆகும். தனது 83–ஆம் வயதில் 1972 ஆகஸ்ட் 24–இல் இயற்கை எய்தினார்.

## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடுங்கள்.
- ஒரே ஓசையுடைய சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- பாடலில் முதல் மற்றும் இரண்டாம் எழுத்து ஒரேபோல் வரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- பாடலில் வரும் ஏதாவது ஒரு தொழிலைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுங்கள்.
- உங்கள் பகுதியில் சிறுதொழில் செய்து முன்னேறியவரிடம் பேட்டி காண்பதற்கான வினாநிரல் தயாரியுங்கள்.

## கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்

ஏழைப் பெண்மணி ஒருத்தி இரண்டு மகன்களுடன் வந்து கொண்டிருந்தாள். அவர்கள் தலையில் காய்ந்த பனையோலைக் கட்டுகள் இருந்தன.



எதிரில் செல்வர் ஒருவர் வந்தார்.

அவரிடம் அவள் "ஐயா! இந்த ஏழைகளுக்கு ஏதாவது பிச்சை போடுங்கள்" என்று கெஞ்சினாள்.

"காய்ந்த பனையோலைகளை எதற்காக எடுத்துச் செல்கிறீர்கள்?" என்று கேட்டார் அவர்.

"அடுப்பு எரிக்க " என்றாள் அவள். "அம்மா! பிச்சை எடுப்பது இழிவான செயல். உன் மகன்களை என்னுடன் அனுப்பிவை. பனையோலைகளைப் பொன்னாக மாற்றும் மந்திரத்தைச் சொல்லித் தருகிறேன். நீங்கள் வளமாக வாழலாம்" என்றார் அவர்.

மகன்களை அவருடன் அனுப்பி வைத்தாள்.

மறுநாளே அவள் மகன்கள் இருவரும் வீடு வந்தார்கள்.

"மகன்களே! பனையோலைகளைப் பொன்னாக்கும் மந்திரத்தை அவர் சொல்லித் தந்தாரா? நீங்கள் கற்றுக் கொண்டீர்களா?" என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

"அம்மா! பனையோலைகளால் பெட்டி, கூடை செய்யக் கற்றுக் கொண்டேன். தம்பி அழகான தொப்பி செய்வான். நாம் அவற்றை விற்று வளமாக வாழலாம்" என்றான் மூத்த மகன்.

இதைக் கேட்ட அவள் மகிழ்ச்சி அடைந்தாள்.

– பேராசிரியர் எ. சோதி

**ஆசிரியர் குறிப்பு** இவர் சிறுவர்களுக்கான கதைகளை எழுதிப் புகழ்பெற்றவர். இருநூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் திருக்குறள் கதைகள், தெனாலிராமன் கதைகள், வேடிக்கை கதைகள், சிந்துபாத்தின் அதிசயப் பயணங்கள் போன்ற நூல்கள் சிறப்பு வாய்ந்தவையாகும்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்து வினாக்கள் உருவாக்குங்கள். விடையும் எழுதுங்கள்.
- கதையை நாடக வடிவில் எழுதுங்கள்.
- சொற்களைப் பிரித்து எழுதுங்கள்.
  - பொன்னாக்கும்
  - பனையோலை
- அகரமுதலி பார்த்துப் பொருள் அறியுங்கள்.
  - காய்ந்த
  - ஆர்வத்துடன்
  - வளமாக
  - இழிவான

## மீன் உரம்

மிகச் சிறந்த உரங்களில் மீன் உரமும் ஒன்று. மீன் உரங்களில் உயிர்ச் சத்து மிகுதியாக உள்ளது. மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் மீன் மிகுதியாகக் கிடைக்கும் காலங்களில் மீன் உரமும் இறால் ஓட்டின் உரமும் தயார் செய்யப்படுகின்றன. இவ்வுரங்களை அருகிலுள்ள காப்பி, தேயிலை, புகையிலை தோட்டக்காரர்கள் வாங்கி அவ்வப்போது பயன்படுத்திக் கொள்கின்றனர்.

'சார்டைன்' என்னும் ஒருவகை மீனை வேக வைத்து அதைப் பிழிந்து எண்ணெய் எடுத்த பின்னர், எஞ்சி நிற்கும் பொருளையே முதலில் மீன் உரமாகப் பயன்படுத்தி வந்தனர். இவ்வகை உரம் இப்பொழுது கிடைப்பது அரிது. ஏனென்றால், எண்ணெய் வடிக்கத் தேவையான அளவிற்கு இவ்வகை மீன்கள் நம் கடற்பகுதிகளில் இப்போது கிடைப்பதில்லை.

கடற்கரையில் மீன்களை உலர்த்திப் பக்குவம் செய்து ஒருவகை மீன் உரம் தயார் செய்வது உண்டு. கூட்டம் கூட்டமாக வாழும் சிறுமீன்கள் தேவைக்கும் அதிகமாகக் கிடைக்கும்போது, அவற்றைப் பிடித்து, அவற்றையோ அல்லது அவற்றின் கழிவுப் பொருள்களையோ, (குடல்களையும் செதில்களையும்) கடற்கரை மணலில் உலர்த்தி இந்த உரம் தயார் செய்யப்படுகிறது. மற்றொரு வகை மீன் உரம், குழிமீன் உரமாகும். குழிகளில் மீன்களையோ அவற்றின் கழிவுப் பொருள்களையோ புதைத்து வைத்து இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குப் பிறகு அவற்றைக் குழிகளிலிருந்து எடுத்து, சில நாள்கள் உலர்த்தி 'குழிமீன் உரம்' தயார் செய்யப்படுகிறது.

இறால் ஓட்டின் உரம் என்பது, இறால் மீன்களை உணவுக்காகப் பதம் செய்யப்படும் போது, அவற்றிலிருந்து கிடைக்கும் ஓர் உபப் பொருளாகும்.

கடற்கரை மீன் உரங்களை உலர்த்தப்படும் மீன் உரம், மீன் கழிவுகள் உரம் என இருவகையாகப் பிரிக்கலாம். உலர்த்தப்படும் மீன் உரத்தில் நைட்ரஜன், பாஸ்பரஸ், கால்சியம் ஆகியவை அதிக அளவில் உள்ளன. மீன் கழிவுகள் உரத்திலும் அவ்வாறே சத்துக்கள் பொருந்தியுள்ளன.

குழிமீன் உரம், மீன் கழிவுகள் குழி உரம், இறால் ஓட்டின் உரம் ஆகியவற்றில் நைட்ரஜன், பாஸ்பரஸ், கால்சியம்,பொட்டாசியம் போன்ற சத்துக்கள் நிறைந்துள்ளன என்பது தெளிவாகிறது.

கடற்கரையில் மீன்களை உலர்த்தித் தயார் செய்யப்படும் முழுமீன் உரத்தில் ஐந்து முதல் ஆறு சதவிகிதம், தழைச்சத்தும் (நைட்ரஜன்)





பதினைந்து முதல் இருபது சதவிகிதம் வரையில் மணலும் இருந்தால், அது முதல் தரமானது என்று கருதலாம். தழைச்சத்து அதிக அளவில் இருக்கும்படி மீன் உரம் தயார் செய்யப்பட வேண்டுமானால், சில முறைகளை மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக மீன்களை உலர்த்தும்போது அவற்றுடன் அதிக அளவில் மணல் சேராமல் கவனித்துக் கொள்ள வேண்டும்.

கழிவுப் பொருள்களிலிருந்து தயார் செய்யப்படும் மீன் உரத்தில் மூன்று முதல் ஐந்து சதவிகிதம் வரையில் தழைச்சத்து இருக்கும். குழிமீன் உரத்தில் மூன்று முதல் நான்கு சதவிகிதம் வரையில் தழைச்சத்து உண்டு. ஆனால், கழிவுப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்படும் குழி உரத்தில் இரண்டு முதல் மூன்று சதவிகிதம்தான் தழைச்சத்து உள்ளது.

மேற்கூறிய உரங்களைத் தயாரிக்கும் போது மணல் சேர்ப்பது இன்றியமையாததாகும். ஆனால், மணலைப் பதினைந்து முதல் இருபது சதவிகிதத்திற்கு மேல் சேர்க்கக் கூடாது.

இறால் ஓட்டு உரங்களில் சுண்ணாம்புச் சத்து அதிக அளவு உள்ளது. இது தவிர தழைச்சத்தும் மணிச்சத்தும் ஒரு குறிப்பிட்ட அளவில் இருக்கின்றன. அமிலத்தன்மையை மாற்ற வேண்டிய களர்நிலங்களுக்கும் வேண்டாத நுண் கிருமிகள் பெருக்கத்தைத் தடுக்க வேண்டிய நிலங்களுக்கும் சுண்ணாம்புச் சத்து தேவை. எனவே, இறால் ஓட்டு உரங்கள் இவ்வகையான சிலவகை நிலங்களுக்கு மிகவும் பயன்படுகின்றன.

பொதுவாக மீன் உரங்கள் நெல், காப்பி, தேயிலை, புகையிலை, தென்னை ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் விளைச்சலுக்கும் தேவையானவையாகும். இவ்வுரங்களைப் பயன்படுத்தினால் அதிக விளைச்சலைப் பெறலாம்.

– முத்துகிருஷ்ணன்

**ஆசிரியர் குறிப்பு** இவர் ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார். தன்னுடைய கட்டுரைகளில் இயற்கை விவசாயத்தை ஊக்கப்படுத்துவதற்கான வழிமுறைகளை எடுத்துரைத்துள்ளார்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியில் கூறப்பட்டுள்ள உர வகைகளை எந்தெந்த விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்றனர் என்பதைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.
- மீன் உரங்கள் எவ்வாறு தயார் செய்யப்படுகின்றன?
- உங்கள் வீட்டிலுள்ள கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி உரம் தயாரிக்கும் முறையைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

# உழைப்பின் பெருமை



## மீனினங்கள் – உணவினங்கள்

ஒன்றா இரண்டா மீனினங்கள்!
ஒப்புமை இல்லா கயலினங்கள்!!
எண்ணிக்கையில் எளிதில் அடங்காது – அவை
அனைத்தையும் அறிந்திடவோ இயலாது.

மலையின் மடியின் முதலாக
கடலின் அடிவரை என்றாக
மீன்களின் இனங்களின் களமிருக்கும்
நீர் நிலைகளின் ஏற்பிருக்கும்.

கடலில் கணக்கற்ற மீன்களிருக்கும்
உவர்நீரில் ஓரளவு மீன்களிருக்கும்
நன்னீரில் நல்லபடி மீன்களிருக்கும்
மீனில்லா நீர்நிலை எங்கிருக்கும்?

எங்கே மீன்கள் இருந்தாலும்
அங்கே அவைசுவை உணவாகும்
கடல் மீன்களுக்கு முதல்மரியாதை
நன்னீர் மீன்களுக்குத் தொடர்மரியாதை

கேரளத்தின் மாநில மீன் – கரிமீன்

கடல்மீன் உற்பத்திப் பிடிப்பாலாகும்
நன்னீர் மீன்களோ வளர்ப்பாலாகும்
முன்னாலே இந்நிலை இருந்ததாகும்
தன்னாலே இப்போது மாறுவதாகும்

கடலிலும் விவசாயம் நடக்கிறது – அங்கே
கடற்பாசியும் மீனும் விளைகிறது
நன்னீர் நிலைகள் அனைத்தினிலும் – இன்று
மீன் விவசாயம் சிறக்கிறது

மீன்வளர்க்க வளர்ப்பு நுட்பமுண்டு – அதற்கு
ஆதரவு தந்திடத் துறையுமுண்டு
ஆலோசனை பெற்றிட வாய்ப்புண்டு
மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையுண்டு.

– டாக்டர் வெ. சுந்தரராஜ்

**ஆசிரியர் குறிப்பு** இவர் தூத்துக்குடி மாவட்டத்தில் 1943 – இல் பி. வெள்ளையா, வெ. தேவகனி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். மீன்வளக் கல்வி, ஆராய்ச்சியில் முப்பத்தைந்து ஆண்டுகள் அனுபவம் கொண்டவர். இவர் மீன் மற்றும் இறால் வளர்ப்பு ஆலோசகராகச் செயல்பட்டவராவர். கூட்டு மீன் வளர்ப்பு, ஆழ்கடல் அதிசயங்கள் போன்றவை இவரது குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

## செயல்பாடுகள்

- கவிதையை மெட்டமைத்துப் பாடுங்கள்
- பாடலில் முதல் மற்றும் இரண்டாம் எழுத்து ஒரேபோல் வரும் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.
- பாடலின் கருத்தை வகுப்பில் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- சொற்களைச் சேர்த்து எழுதுங்கள்
    - நன்மை + நீர் =
    - கணக்கு + அற்ற =
    - முதல் + மரியாதை =
    - இந்த + நிலை =
    - மீன் + இனங்கள் =
- உங்கள் வீட்டிலுள்ள பெரியவர்களிடம் மீன்களின் பெயர்களைக் கேட்டறிந்து எழுதுங்கள்.

## மீன்பிடித் திருவிழா...

"உலகின் பல்வேறு நாடுகளில் வசிக்கும் மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக, மீன்களை உணவாகச் சாப்பிட்டு வருகிறார்கள். இதற்காகக் கடல், ஆறு, குளம், குட்டை ஆகியவற்றில் மீன் பிடிக்கும் பணிகளை மட்டுமே நீண்டகாலமாகச் செய்து வந்தார்கள். அதாவது,



மீன் வளர்ப்பில் ஈடுபட்டதில்லை. நீர்நிலைகளில் இயல்பாகவே அதிக அளவில் மீன்கள் உற்பத்தியாகிக் கிடைத்து வந்தன. காலப்போக்கில் மக்கள் தொகை பெருக்கத்தால் மீன்களுக்கான தேவை பல மடங்கு அதிகரித்ததால், பற்றாக்குறை ஏற்படத் தொடங்கியது. மீன், சத்தான உணவு. எளிதில் செரிமானம் ஆகக்கூடியது. எனவே இதைத் தவிர்ப்பதோ, தேவையைக் குறைத்துக் கொள்வதோ சாத்தியமில்லை. இதனால், மீன்வளத்தை அதிகப்படுத்துவது காலத்தின் கட்டாயமானது.

இதற்கான முயற்சிகளில் உலக நாடுகள் இறங்கின. அதிக அளவில் மீன்கள் உற்பத்தி செய்வதற்கான தொழில்நுட்பங்களைக் கண்டுபிடித்தல், இதற்கான வல்லுநர்களை உருவாக்குதல், மீன்வளர்ப்பு சார்ந்த பட்டப்படிப்புகளை ஏற்படுத்துதல் ஆகிய முன்னெடுப்புகள் வேகமாக நடைபெற்றன. இதன் விளைவாகவே, குளங்கள் மற்றும் பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்கும் தொழில் அறிமுகமாகி, நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்துகொண்டே இருக்கிறது. தற்போது, உலக அளவிலான மொத்த மீன் உணவுத் தேவையில் ஐம்பதுச் சதவிகிதம், வளர்ப்பு மீன்கள் மூலம்தான் நிறைவு செய்யப்படுகின்றன. ஆனால், இன்றைக்கும் கூடப் பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் விதமாக, கிராமப்புறங்களில் மீன்பிடித் திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன. மீன் என்பது மிகவும் சத்தான உணவாகும். இதில், ஒமேகா–3 என்ற கொழுப்பு அமிலம் அதிக அளவில் உள்ளது. இது, மனித உடலுக்கு நன்மை செய்யக்கூடிய கொழுப்பு அமிலமாகும். இதயம் சம்பந்தமான நோய்கள் வராமல் பாதுகாக்கும்" என்கிறார் முனைவர் பெலிக்ஸ்.

– பசுமை விகடன்

## செயல்பாடுகள்

- உணவுப் பொருட்களை வைத்து ஏதாவது விழாக்கள் கொண்டாடப்படுவதுண்டா? தகவலைத் திரட்டி எழுதுங்கள்.

## நெய்தல் நிலத்துத் தொழில்கள்

**ஐந்திணைகள்**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், உலர் மீன் தயாரித்தல், உலர்மீன் விற்றல், மீன் விற்றல், உப்பு விற்பனை செய்தல், முத்தெடுத்தல் போன்றவற்றை நெய்தல் நிலத்து பெருந்தொழில்களாகச் சுட்டலாம்;மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள பரதவர்கள் படகில் இருந்தபடியே, ஒரு மூங்கிலின் நுனியில் கட்டப்பட்ட கூர்மையான வாயையுடைய ஓர் உளியைக், கொம்பையுடைய சுறா மீனை நோக்கி எறிவர்.அவ்வுளியின் கூர்மையினாலும் மீன்பிடித் தொழிலாளர்களின் விசையுடன் கூடிய தாக்குதலாலும் அவ்வுளி மீனின் முகத்தில் ஆழமாக அழுந்திவிடும். பின்பு அம்மீனை மூங்கிலின் மறு நுனையில் கட்டிய கயிற்றால், மூங்கிலை இழுத்துத் தாம் கொன்ற சுறாமீனைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்ப்பார்கள். இப்பேரொலியைக் கேட்டுக் கரையில் இருக்கும் குறுகிய கால்களையுடைய அன்னப்பறவைகள் அஞ்சி ஓடும்.அவ்வாறு எறியப்படும் உளிக்கு 'எறிஉளி' என்று பெயர். இதனை,

நெய்தல் – கடலும் கடல் சார்ந்த இடமும்

"கொல்வினை பொலிந்த கூர்வாய் எறிஉளி
முகம்பட மடுத்த முளிவெதிர் நோன்காழ்
தாங்கு அரு நீர்ச்சுரத்து எறிந்து வாங்குவிசைக்
கொடுந்திமிற் பாதவர் கோட்டுமீன் எறிய
நெடுங்கரை இருந்த குறுங்கால் அன்னத்து
வெண்தோடு இரியும் வீததை கானல்
கைதையம் தண்புனற் சேர்ப்பனொடு
செய்தனெம் மற்ற , ஓர் பகை தரு நட்பே "

(குறுந்தொகை – 304)



என்ற பாடலால் அறியலாம்.

பரதவர்கள் மீன்பிடித் தொழிலுக்காகக் கடல் பாதைகளை வரையறுத்து வைத்திருந்தனர்.பகல் நேரங்களை விட இரவு நேரங்களில் செல்லும் மீன்பிடித் தொழிலாளர்கள் சிறப்புப் பயிற்சி பெற்றவராக இருந்துள்ளனர். இரவு நேர மீன்பிடிப் படகுகளில் விளக்குகளைப் பயன்படுத்தி உள்ளனர். மீன்பிடித் தொழிலுக்காக வலைகள், பலவகை தோணிகள் ,கருவிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி உள்ளனர்.மீன்பிடித் தொழிலில் வல்லமை பெற்ற ஆண்களுக்கு தங்கள் பெண்களைத் திருமணம் செய்து கொடுத்துள்ளனர்.உலர் மீன் தொழிலைப் பெண்கள் செய்துள்ளனர்.மீன், உப்பு, முத்து போன்றவற்றை விற்று நெல், அரிசி, பருப்பு போன்ற பொருட்களைப் பண்டமாற்றாகப் பெற்றுள்ளனர்.

## வினைமுற்று

பள்ளிக்கூடத்தில் காலை மணி அடித்தது. எல்லா மாணவர்களும் வகுப்பிற்குள் நுழைந்தனர். வகுப்பாசிரியர் உள்ளே வந்தார். மாணவர்கள் எழுந்து வணக்கம் தெரிவித்தனர். ஆசிரியர் அவர்களை அமரச் சொல்லிவிட்டுப் பாடத்தை நடத்தத் தொடங்கினார். அப்பாடப்பகுதியில் எழிலன் என்ற மாணவனுடைய காலை நேர நிகழ்வுகளை ஆசிரியர் கூறினார்.
எழிலன் காலையில் எழுந்தவுடன் தமிழ்ப் பாடத்தைப் படித்தான். தொடர்ந்து வீட்டுப் பாடங்களை எழுதினான். இடையே அம்மா கொண்டு வந்த தேநீரைக் குடித்தான். பின்பு பள்ளிக்கூடம் செல்ல ஆயத்தமானான். சாப்பாட்டு மேசையில் இருந்த சிற்றுண்டியைச் சாப்பிட்டான். சாப்பிட்டு முடித்தவுடன் வேகமாகப் பள்ளிக்குக் கிளம்பினான். போகும் வழியில் மயில் ஒன்று நிற்பதைக் கண்டான். அது தன் சிறகை விரித்து நடனம் ஆடியது. அதைக் கண்டு மரக்கிளையில் இருந்த குயில் கூவியது. இவற்றையெல்லாம் ரசித்துக் கொண்டே பள்ளிக்கூடம் அடைந்தான்.

படித்தான், எழுதினான், குடித்தான், சாப்பிட்டான், கிளம்பினான், கண்டான், ஆடியது, கூவியது ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இச்சொற்கள் வினை (செயல்) முடிந்ததைக் காட்டுகிறது. இவ்வாறு பொருள் முற்றுப்பெற்ற சொற்களை வினைமுற்று என்பர். வினையைச் செயல் என்று கூறுவர்.

கண்ணன் ஓடினான்
மீனா ஆடுகிறாள்
ஆசிரியர் எழுதுவார்
பசு மேய்கிறது
மரங்கள் அசைகின்றன

இங்கு ஓடினான், ஆடுகிறாள், எழுதுவார், மேய்கிறது, அசைகின்றன என வருபவை வினைமுற்றுகள். வினைமுற்றுகள் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று காலங்களிலும் அமையும். அவை பெரும்பாலும் வாக்கியங்களின் இறுதியில் வரும்.

மாணவர்கள் நேற்று கால்பந்து விளையாடினார்கள்.
ஆசிரியர் திருக்குறள் பாடம் நடத்துகிறார்.
தன்யாவின் பரதநாட்டியம் நாளை மாலை நடைபெறும்.

## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை வாசித்துக் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.
- எறி உளி என்றால் என்ன?
- ஐவகை நிலங்கள் யாவை? நெய்தல் நிலம் எதனுடன் தொடர்புடையது என்பதை எழுதுங்கள்?
- மீன்பிடிக்கப் பயன்படுத்தும் கருவிகள் யாவை?
- கீழே தரப்பட்டுள்ள தொடர்களைக் கொண்டு வாக்கியம் அமையுங்கள்.
  - பண்டமாற்றம்
  - வலைகள்
- நீங்கள் கடலில் மீன்பிடிப்பதைப் பார்த்திருப்பீர்கள் அல்லவா? எஞ்சிய மீன்களைப் பதப்படுத்தும் முறைகளை ஆசிரியரின் உதவியோடு கலந்துரையாடி எழுதுங்கள்.
- கீழ்க்காணும் பகுதியில் வரும் வினைமுற்றுகளைக் கண்டுபிடியுங்கள்.

  காட்டில் புலி ஒன்று மானை வேட்டையாடத் துரத்தியது. மான் தன்னுயிரைக் காத்துக் கொள்ள வேகமாக ஓடியது. மானைத் துரத்திச் செல்லும் போது , வேடன் விரித்திருந்த வலையில் புலி சிக்கிக் கொண்டது. வேடன் வலையில் புலி சிக்கியதைக் கண்டான். அதைக் கூண்டில் அடைக்க முயன்றான். அப்பொழுது புலி வேடனைப் பார்த்து "என்னைக் கூண்டில் அடைக்காதே விட்டுவிடு, நான் ஓடிப் போகிறேன்." என்று கெஞ்சியது. அதற்கு வேடன் " அதெல்லாம் முடியாது" என்று கூறினான்.

  எ.கா – துரத்தியது

  - 
  - 

## அகர முதலி

| | | |
|---|---|---|
| அம்பலம் | – | கோவில் |
| அருங்காட்சியகம் | – | அரிய பொருட்களைக் காட்சிப்படுத்தும் இடம் |
| அவனி | – | பூமி, உலகம் |
| அறம் | – | தர்மம், நல்ல செயல்கள் |
| ஆடை | – | உடை |
| ஆர்வத்துடன் | – | விருப்பத்துடன் |
| ஆன்டி | – | அத்தை |
| இடையூறு | – | துன்பம், தடை |
| இல்லம் | – | வீடு |
| இலங்க | – | விளங்க |
| இழிவான | – | கேவலமான |
| இழுக்கம் | – | பிழை, தீய ஒழுக்கம் |
| இன்னல் | – | துன்பம் |
| உசரம் | – | உயரம் |
| உவர் நீர் | – | உப்பு நீர் |
| ஊர்திகள் | – | வாகனங்கள் |
| ஊழியர் | – | பணியாளர் |
| ஒருங்கிணைப்பாளர் | – | வழிநடத்துபவர், ஒன்றிணைப்பவர் |
| கம்ப்யூட்டர் | – | கணினி |
| கர்வம் | – | செருக்கு, ஆணவம் |
| கரியமில வாயு | – | கார்பன் டை ஆக்சைடு |
| களி | – | மகிழ்ச்சி |
| கன்னல் | – | கரும்பு |
| காய்ந்த | – | உலர்ந்த |
| கார் | – | மகிழ்வுந்து |
| காலி | – | வெற்றிடம் |
| குயவர் | – | மட்பாண்டம் செய்பவர் |
| கூட்டுறவு | – | ஐக்கியம் |
| கூதிர் | – | குளிர் |
| கொல்லர் | – | இரும்பு வேலை செய்பவர் |
| கொறைச்சல் | – | குறைவு |
| சச்சரவு | – | சண்டை, வாக்குவாதம் |
| சமத்துவம் | – | சமநிலை |
| சால்வை | – | மேலுடம்பில் போர்த்திக் கொள்ளும் சிறு துண்டு |

| | | |
|---|---|---|
| சாளரம் | – | சன்னல். |
| சீராக | – | ஒழுங்காக |
| சீற்றம் | – | தீவிரம் |
| சுவடுகள் | – | கால் தடம் |
| சேவை | – | தொண்டு |
| தச்சர் | – | மர வேலை செய்பவர் |
| நற்செயல் | – | நல்ல செயல்கள் |
| நாசூக்காக | – | நயமாக |
| நெறிமுறை | – | விதிமுறை |
| நேர்மை | – | உண்மை |
| பண்பு | – | குணம் |
| பாங்கு | – | அழகு |
| பார் | – | உலகம் |
| பிளாஸ்டிக் | – | நெகிழி |
| புகலிடம் | – | காப்பகம் |
| புழுங்குறோம் | – | வருந்துகிறோம் |
| மதகு | – | நீரை வெளியேற்றுவதற்குத் திறந்து மூடும் கதவு |
| மன்றாடுதல் | – | வேண்டுதல் |
| மனித நேயம் | – | சக மனிதர்களிடம் காட்டும் அன்பு |
| மேனி | – | உடல் |
| வயிறுமுட்ட | – | வயிறு நிரம்ப |
| வளமாக | – | செழிப்பாக |
| விண் | – | வானம், ஆகாயம் |
| விந்தை | – | ஆச்சரியம் |
| வியப்பு | – | ஆச்சரியம் |
| விருப்பம் | – | ஆசை |
| விழவும் | – | விரும்பும் |
| வெக்கை | – | வெப்பம் |
| வெண்மை | – | வெள்ளை நிறம் |
| வேதனை | – | துன்பம் |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ    பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in


**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online **R. T. E Monitoring** : **www.nireekshana.org.in***